Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/984)

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 12 சனிக்கிழமை (29.10.2011) பக்கங்கள் 16 | ஓசை – 29



தமிங்கிலப் போர்

11



கொலை அச்சுறுத்தல்

08



'மின்னல்' 45 பேர் பலி

14



மன்மோகன் சிங் தயங்கினார்

12

## கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட சந்திப்பு வழமையானது என்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

அரசியல் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அரசாங்கம் வழமையாக முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளின் ஒரு கட்டமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பும் அமைந்துள்ளது என இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இரா ஜாங்க செயலாளர் றொபேட் ஓ பிளேக் உள்ளிட்ட அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்தது.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கு மிடையே (15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வை அரசு முன்வைக்க அமெரிக்க அழுத்தம் மட்டும் போதாது


(வொஷிங்டன்)



அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டுமென இலங்கை அரசுக்கு அமெரிக்கா கொடுக்கும் அழுத்தம் மட்டும் போதாதெனவும், இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் ஏனைய சர்வதேச சமூகத்தின் அழுத்தமும், ஒத்துழைப்பும் தேவையெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 26 ஆம் திகதியிலிருந்து (15ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுக்காக அரசுடன் ஒத்துழைக்கத் தயார்

## ஐ.தே.க.அறிவிப்பு



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலகச் செயற்பாட்டுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிநிதிகளை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டின் இறுதிக்குள் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதும், காத்திரமானதுமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும். தேச ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படாத வகையிலான அதிகாரப் பரவலாக்கத் தீர்வுத்திட்டத்தை (15ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு நிலைமை சுவிஸ் குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் தோமஸ் லிக்சர், தூதுவராலய திட்டமிடல் பணிப்பாளர் ஜெனி கொண்டாசியல் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் யாழ்.குடாநாட்டுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு, மாவட்டத்தின் தற்போதைய தேவைகள் குறித்து யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதன்போது, யாழ்ப்பாணத்தில் பத்து சதவீதமான இளைஞர்கள் வேலை வாய்ப்பு எதுவும் அற்றவர்களாக இருப்பதாகவும், அவர்களுக்கான வேலைத்திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் எனவும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

மேலும், தற்போது வலிகாமம் மற்றும் ஏனைய பகுதிகளில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு (15ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாடு கோலாகலமாக ஆரம்பம்



(பேர்த்)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு நேற்றைய தினம் அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபேத் தலைமையில் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

54 நாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்கின்ற இந்த மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் சார்பில் கலந்துகொள்கிறார்.

இம்மாநாட்டில் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 3000 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பதுடன் நேற்றும் இன்றும் இரு நாள் நிகழ்வாக இம்மாநாடு நடைபெறவுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவினர் கடந்த 24 ஆம் திகதி அவுஸ்ரேலியாவுக்குப் பயணமாயினர். இக்குழுவில் ஜனாதிபதியின் பாரியார் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிராக ஆஸியில் ஆர்ப்பாட்டம்




(பேர்த்)

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் கொமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு வாழும் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில ஈடுபட்டனர். இலங்கையின் உள்நாட்டுப் போரில் தனது குடும்பத்தைச் சேர்ந்த 79 பேரை தான் இழந்துள்ளேன் என இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யோகன் தர்மா என்பவர் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் பங்கேற்ற அஜந்தி என்ற பெண், இலங்கையில் பெருமெடுப்பில் இனப்படுகொலைகள் இடம் பெற்றுள்ளதாகவும், இலட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர நேரிட்டதாகவும் கூறியுள்ளார். இலங்கையைக் கொமன் வெல்திலிருந்து இடைநிறுத்துவதற்கு எமக்குத் தேவை அவுஸ்ரேலியாவின் (15ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு விரைவில் அமைக்கப்படும்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தயாரிப்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக் குழு வெகு விரைவில் நியமிக் கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் தெளிவான நிலைப்பாடின்மை, கடந்த காலங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் என்பனவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைப்பதில் தாமதம் ஏற்படக் காரணமாயின.

இப்போது எதிர்க்கட்சிகள் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்காவிட்டாலும் ஆளும் கட்சி (15ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மீனவர்களின் பிரச்சினை ஆராய பலாலியில் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராயும் விசேட கூட்டமொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பலாலி படைத்தலைமையகத்தில் நடை பெறவுள்ளதாக கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வடபிராந்திய கடற்படைக் கட்டளைத் தளபதி மற்றும் கடற்தொ ழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் பங்குகொள்ளும் இவ் விடேச கூட்டத்தில், யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களால் மேற்கொள்ளப்ப டும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளின் மூலமாக கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

அத்துடன், இந்தத் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறை மூலம் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த கடற்படையினரது ஒத்துழைப்பைக் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளினால் கோரப்படவுள் ள தாகவும் தெரிய வருகின்றது.

ட்றோலர் மடி வலை மீன்பிடி (15ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம், மாநகரசபை

**சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச் சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## கேள்வி அறிவித்தல் -2012

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2012 ஆம் திகதி முதல 31.12.2012 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக) | ரூ 500.00 |
| கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி | 01.11.2011 தொடக்கம் 18.11.2011 காலை 10 மணிவரை |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | 18.11.2011, நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்வி திறத்தல் | 18.11.2011, பிற்பகல் 2.30 மணிக்கு |

விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகரஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 18.11.2011 ஆம திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமத மாககிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக்காரர்கள் அல்லது அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

குறிப்பு :-

01) கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

02) சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்ட ணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்திற்கு (கல்லுக்கு) நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறிவிடக்கூடாது.

03) சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 10.00 உம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடார்.

04) சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு / கோழி ஆகிய பொருட்கள் விற்பனை செய்யும உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்தவேண்டும்.

05) சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் அகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடத்தின் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதத்தினையும் இணைத்தல் வேண்டும்.

06) கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12% VAT, 2% NBT சேர்த்துச் செலுத்தவேண்டும்.

07) சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின்1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டும். மிகுதித் தொகையின் 1/8 பங்கை ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான 8மாதகாலப்பகுதிக்குள் 2012 ஜனவரி முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.

08) கேள்விப்பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.

09) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகர சபைக்கே உரியது.

10) கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகரசபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டவராகஇருத்தல் கூடாது.

## இறைச்சிக்கடை குத்தகை

| தொ இல | இறைச்சிக்கடை | கடை இல | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 2% தே.க.எ.வரியும் நீங்கலாக |
|---|---|---|---|
| 1. | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல 01 | 109263.00 |
| 2. | பண்ணை கருவாட்டுக்கடை | இல 02 | 36383.00 |
| 3. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 03 | 97020.00 |
| 4. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 04 | 132825.00 |
| 5. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 05 | 60638.00 |
| 6. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 06 | 60638.00 |
| 7. | பண்ணை கோழிக்கடை | இல 07 | 48510.00 |
| 8. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல 08 | 48510.00 |
| 9. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 109148.00 |
| 10. | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல 02 | 161700.00 |
| 11. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 103373.00 |
| 12. | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல 02 | 102795.00 |
| 13. | புங்கன் குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 60638.00 |
| 14. | புங்கன் குளம் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 133403.00 |
| 15. | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 31185.00 |
| 16. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 103373.00 |
| 17. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 02 | 127050.00 |
| 18. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 03 | 78829.00 |
| 19. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 04 | 80850.00 |
| 20. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 05 | 64103.00 |
| 21. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 06 | 80850.00 |
| 22. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 07 | 80850.00 |
| 23. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 08 | 80850.00 |
| 24. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 09 | 80850.00 |
| 25. | நாவாந்துறை கோழிக்கடை | இல 10 | 11550.00 |
| 26. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல 11 | 11550.00 |
| 27. | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 12 | 11550.00 |
| 28. | அரியாலை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 225225.00 |
| 29. | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 24255.00 |
| 30. | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 103950.00 |
| 31. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 157658.00 |
| 32. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 02 | 157658.00 |
| 33. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 03 | 157658.00 |
| 34. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 04 | 157658.00 |
| 35. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 05 | 157658.00 |
| 36. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 06 | 157658.00 |
| 37. | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல 07 | 157658.00 |
| 38. | முஸ்லிம் கல்லூரி ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 28875.00 |

# கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள friend foundation நிறுவனத்தினர் சிறுவர் நலன் பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பான கட்டுரைப் போட்டியினை நடத்தவுள்ளனர். போட்டிகள் தரம் 6,7,8 கனிஸ்ட பிரிவு தரம் 9,10,11 இடைநிலைப் பிரிவு சிரேஷ்ட பிரிவு 12, 13 என மூன்று பிரிவுகளைத் தமிழ் மொழியில் நடைபெறவுள்ளன. கனிஷ்ட பிரிவு மாணவர்கள் சிறுவர் மகிழ்ச்சியில் நன்னிலை பெறுவதற்கான வழிகள்" என்னும் தலைப்பில் 700 - 1000 சொற்களிலும், சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் யுத்தம் முடிவடைந்த நிலையில் தற்போதைய சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீரவுகளும் என்னும் தலைப்பில் 1000 - 1500 சொற்கலிலும் கட்டுரை எழுதவேண்டும்.

கட்டுரைகள் யாவும் மாணரவ்களின் சுயவிருப்பங்களுடன் அதிபரால் ஊறுதிப் படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். 01.11.2011 இற்கு முன்னர் (uk friend fandation) 92,பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (06)

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை

## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், விஞ்ஞானபீடம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் மற்றும் விஞ்ஞானபீடம் ஆகியவற்றிற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளன முதலாம் வருட மாணவர்களுக்கான 2010/2011 கல்வியாண்டிற்கான அறிமுக நிகழ்வு 02.11.2011 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு மீள ஆரம்பமாகும். அறிமுக நிகழவில தவறாது கலந்துகொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பீடங்களின் ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளும் 02.11.2011 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும்.

பதிவாளர்,
28.10.2011 (C/1045)

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
# கலைப்பீடம்

## புதிய கல்வியாண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம் 2010/2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு கல்வியாண்டு 2010 / 2011 இல கலை, சட்டம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் இசை நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டு பதிவை மேற் கொண்ட புதுமுக மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2010 / 2011 இற்கான திசை முகப்படுத்தல் நிகழ்வு (oricntation programme) பின்வரும் ஒழுங்குகளில் நடைபெறும்.

| | |
|---|---|
| கலை, சட்டம் | 08.11.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி (இடம் ~ கைலாசபதி கலையரங்கு, பல்கலைக்கழக பிரதான வளாகம்) |
| இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பு | 9.11.2011 புதன்கிழமை காலை 9 மணி (இடம் ~ இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம்) |

மாணவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் காலை 8.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கலைப்பீட ஏனைய அனைத்து மாணவர்களுக்குமான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் எதிர்வரும் 31.10.2011 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும்.

பதிவாளர்,
28.10.2011 (C/1046)

## பொதுச்சந்தைக் குத்தகை

| தோ இல | பொதுச்சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (12% பெறுமதி சேர் வரியும், 2% தே.க.எ.வரியும் நீங்கலாக |
|---|---|---|---|
| 1. | பேரியகடை மரக்கறிச் சந்தை | 10000.00 | 1732500.00 |
| 2. | பண்ணை மீன் சந்தை | 10000.00 | 4042500.00 |
| 3. | குருநகர் மீன்சந்தை | 10000.00 | 1212750.00 |
| 4. | செங்குந்தா சந்தை | 10000.00 | 727650.00 |
| 5. | நாவாந்துறை மீன் சந்தை | 10000.00 | 548625.00 |
| 6. | அரியாலை மீன்சந்தை | 1000.00 | 115763.00 |
| 7. | பாசையூர் மீன் சந்தை | 2000.00 | 115500.00 |
| 8. | கச்சேரி நல்லூர் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 121275.00 |
| 9. | பண்ணை மீன் சந்தைச் சிற்றுண்டிச்சாலை | 1000.00 | 60638.00 |
| 10. | பஸ்நிலையக் கடைகளுக்கு கிழக்குப் பக்கமாக உள்ள து.ச.வண்டிப் பாதுகாப்புநிலையம் | 1000.00 | 15120.00 |

மேலதிக விபரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
28.10.2011 (C/1044)

தேர்வுகளில் வெற்றி பெற்றால் தான் உயர் வகுப்பிற்குச்செல்ல முடியும் அதுபோல் ஆன்மீகத்தில் நாம் தகுதி பெற்றிருக்கிறோமோ, என்பதை ஆண்டவன் பலவிதமான முறைகளில் நம்மைச் சோதிக்கிறார்.

- பாபா-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மூக்கின்றி இருப்பதிலுள்ள திருப்தி!

நம்மைப் பற்றி நமக்கிருக்கும் நல்லபிப்பிராய நினைவைத் துறக்க முடியாமலிருப்பது ஒரு பெரிய பிரச்சினைதான்! அதிலும் நாம் ஆண்ட பரம்பரை என்ற கடந்தகால ஆதிக்கப் பெருமித உணர்வும் கொண்டவர்களாயிருந்தால், மற்றவரோடிணங்கி வாழ்வதற்கான தடைக்கல் மேலும் பெரியதாகி விடுகிறது.

தீர்வு நமக்குத் தேவை; ஆனால் அதை அவர்கள் முழந்தாளிட்டுப் பணிவாகத் தட்டில் வைத்துத் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பிலும் தடுமாறுகிறோம் என்று தோன்றுகிறது. அதற்கு வெளியிலிருந்து யாராவது அவர்களை மிரட்ட மாட்டார்களா என்ற நப்பாசையே உட்கிடக்கை. நமது மக்கள் எவ்வளவு இழிநிலையில் அரைபட்டுக் கிடந்தாலும், 'நமக்கு மற்றவர்கள் சமதையானவர்கள் இல்லை' என்ற சிந்தனையிலிருப்பவர்களே இந்த மக்களின் அரசியல் குரலாக மேலோங்கியிருப்பது தமிழ்வாழ்க்கையின் துரதிர்ஷ்டம்தான்!

நமது 'சரி'கள் பற்றியே எப்போதும் நம் நினைவிருக்கிறது. ஆகவே, எதிர்த்தரப்பே மன்னிப்பைக் கேட்டுக்கொண்டு இறங்கி வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மட்டுமே நம் ஒரே அரசியல் செயல்பாடாகி விடுகிறது. காத்திருப்பு நீள நீள குற்றச்சாட்டுகளும் சமத்காரமான எதிர்ப்பு அறிக்கைகளுமே நம் கேடயங்களாகிக் கொள்கின்றன. பெருங்காய டப்பா நினைவுகளில், சிறுபிள்ளைத்தனமான முரண்டும் பிடிவாத மறுப்புகளுமே நமக்கான அரசியல்ஞானமாகத் தேங்கிவிட்டிருக்கிறது!

தீர்வு காண்பதற்குப் பேச வேண்டியது என்ன என்பதைப் புறக்கணிப்பவர்களாகி விடுகிறோம். எதிர்த்தரப்பை இணங்க வைத்து வெல்வதற்குப் பதிலாகக் கோபப்படுத்துவதில் தற்திருப்தி அடைந்து கொள்கிறோம். எதிர்த்தரப்பை ஆவேசப்படுத்துவதில் – பிளவு அரசியலில் குறுகிய அரசியல் ஆதாயங்களைக் கண்டுகொள்கிறோம். குரலற்ற மக்கள் மீது துன்பங்களைச் சுமத்தியவாறே 'ரோச அரசியலை' தொடர்கிறோம். எதிரிக்கு வில்லங்கம் கொடுக்க முடியுமாக இருந்தால் நாம் மூக்கின்றி இருப்பது பற்றி என்ன கவலை?

நம்மிடம் சரிகள் இருப்பது போலவே எதிர்த்தரப்பும் தன் சரிகளை வைத்துக் கொண்டுதானிருக்கும் என்ற எளிய உண்மையை மறந்து விடுகிறோம். பிரச்சினை என்னவென்றால், இந்த சரிகளைப் பேசிக் கொண்டிருப்பதால் ஒருபோதும் நல்லிணக்கம் உருவாகி விடுவதில்லை. தங்கள் தங்கள் தவறுகள், குற்றங்கள் குறித்த உணர்வும் பரஸ்பர மன்னிப்புப் பரிமாறலுமே நம்மை நல்லிணக்கம் நோக்கிச் செலுத்துவதாக இருக்கும்.

ஆனால், நம் அறிஞர்கள் பிரமுகர்கள் எனப்படுவோரும், மக்களுக்காகக் குரல் தருவதாகக் காட்டிக் கொள்வோரும் வீரம், ரோசம், பழம்பெருமை என்பவற்றைச் சொல்லி வன்முறை எதிர்ப்பு உணர்வைக் கைவிடாதிருப்பதே உயர்வான மனித மதிப்பீடுகளாகப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்புக் கோஷங்களின் மூலம் பகைவரைப் பணிய வைத்துவிடலாம் என்ற உணர்ச்சிகர ஏமாற்றினால் மக்களது வாழ்வைச் சிதைத்து வருகிறார்கள்.

இப்போதும் சாதாரண மக்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பதையே இவர்கள் வீரம் ரோசம் எனும் பண்புகளாக விதந்தோதிக் கொண்டிருக்கிறார்கள். எதார்த்த நிலையை மறைத்து இவர்கள் காட்டும் பழம்பெருமை மதிப்பீடுகள் பற்றிய முழக்கங்களால் மக்களை மயக்கநிலையில் வைத்திருப்பதுடன் வாழவொட்டாமலும் வதைத்து வருகிறார்கள்.

வாழ்வைப் பெறும் வழி பற்றியும் நம்பிக்கை கொடுக்காமல், வழிகளைத் தேடும் பேச்சுக்கும் நம்பிக்கை காட்டாமல், வெறுப்பு விரக்திக் குற்றச்சாட்டுப் பகை அரசியலிலேயே மக்களை மூழ்கடித்து வருபவர்களை நிறுத்தி நாம் கேள்வி கேட்க வேண்டும். இப்படிச் சிந்திப்பதே 'தமிழ்வீரத்திற்கு' இழுக்கு என்ற மதிப்பீடுகளிலிருந்து நாம் மீண்டாக வேண்டும். நம்மையே வதைத்துக் கொள்ளும் ரோசமும் வீம்பும் பழிவாங்கும் திருப்தியும் ஒருபோதும் மக்களது சுதந்திர வாழ்வாகாது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

– ஆசிரியர்

# இலங்கையில் தனிநபர் வருமானத்தை 4500 அமெரிக்க டொலராக மாற்றத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் 14 சதவீதத்தினராவர். நாட்டில் இருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வோரின் எண்ணிக்கையை 3 மில்லியனாக அதிகரிப்பதன் மூலம் வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கையைப் பெருமளவு குறைக்க முடியுமென சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

எதிர்வரும் 31ஆம் திகதி உலக சனத்தொகை 7 பில்லியன்களாக அதிகரிக்கவுள்ளது. இதனை முன்னிட்டு கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் இந்தியாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை 40 முதல் 45 சதவீதமாகக் காணப்படுகிறது. அந்த வகையில் இலங்கையில் 14 சதவீதத்தினர் மாத்திரமே வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையில் தற்போது தனிமனித வருமானம் 4500 அமெரிக்க டொலர்களாக மாற்றுவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதுமாத்திரமின்றி பொருளாதார வளர்ச்சி 8 இல் இருந்து 9 சதவீதமாக மாற்று வதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப பொருளாதாரக் கொள்கைகளும், பாலின சம பங்கு இலவசக் கல்வி பொதுச் சுகாதாரம் என்பனவும் நிலையாக பேணப்பட்டு வருவதனால் வறுமை நிலையை இலங்கையில் இருந்து முற்றாக நீக்குவதற்கான வேலைத் திட்டங்களும் முனனெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

# சட்டக்கட்டமைப்பு அமுலாகாதவரை நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது

## அத்துரலிய ரத்ன தேரர்

(கொழும்பு)

நாட்டில் முறையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார். நாட்டில் சரியான சட்டக்கட்டமைப்பு அமுல்படுத்தாத வரையில் நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய தேர்தல் முறைமையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றது. குறிப்பாக விருப்புவாக்கு முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

தற்போதைய அரசாங்கத்திற்கு ஏனைய அரசாங்கங்களுக்கு கிடைக்காத மாபெரும் அதிகாரம் காணப்படுகின்றது அதனை நல்லவிதமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முல்லேரியா சம்பவம் போன்ற சம்பவங்கள் மீண்டும் இடம் பெறுவதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் வாக்காளர்களுக்கு எவ்வித மரியாதையும் கிடையாது மக்கள் பிரதிநிதிகள் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதாகவும், மக்களுக்குச் சேவையாற்றுவதில் அவர்களுக்கு நாட்டமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 200 காட்டு யானைகள் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 200 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கின்றது. அவற்றில் சுமார் 100 காட்டு யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக வன விலங்குகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.டி.ரத்நாயக்க குறிபிட்டுள்ளார்.

கடந்த வருடம் 230 காட்டு யானைகள் வரை உயிரிழந்துள்ளன. இந்த வருடத்தில் 35 பேர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாகவும் வனவிலங்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். யானைத் தாக்குதலால் மனித உயிர்களுக்கு ஏற்படுபடுகின்ற அச்சுறுத்தலைத் தவிர்ப்பதற்காக பாதுகாப்பு வேலிகளை அமைக்க வேண்டிய தேவையுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சைவசித்தாந்த வகுப்புக்கள் இம்முறை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவலர்கள் திணைக்களம் வருடந்தோறும் நடத்தும் சைவசித்தாந்த வகுப்புக்கள் இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இவ் வகுப்புக்கள் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான 10 தினங்கள் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னை இராமகிருஷ்ண மிஷன் - விவேகானந்தா கல்லூரியின் பேராசிரியர் சித்தாந்த செம்மணி சா.சரவணன் இவ் வகுப்புக்களை நடத்தவுள்ளார்.

இந்த வகுப்புக்கு ஆசிரியர்கள், அற நெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வமுடைய அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறுமாறு திணைக் களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (உ)

# அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை

(வவுனியா)

வவுனியா பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடந்த 25ஆம் திகதி வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போதிலும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் சார்பில் அதன் தலைவருக்கு அழைப்பிதழ் வழங்கப்படாமை கண்டிக்கத்தக்க விடயம் என பிரதேச சபையின் தலைவர் க.சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது அனைவரது பங்களிப்பும் சார்ந்த விடயமாக இருத்தல் வேண்டும். இந்த வகையில் வவுனியாவின் பாரிய பிரதேசங்களை உள்ளடக்கிய வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும். இக் கூட்டத்திற்கு ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த வவுனியா பிரதேச செயலாளரின் இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்க விடயமாகும்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை உருவாக்கப்பட்டு முதன் முதலாக மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுப் பல்வேறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அரசியல் காரணங்களுக்காக பிரதேச செயலாளர் பக்கச் சார்பாக நடந்து கொள்வது விசனத்தை ஏற்படுத்தும் ஒரு விடயம் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் உடனடியாக அறிவித்தல் வழங்கியிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (125)

# கால்நடைகளை கட்டி பராமரிக்குமாறு பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ள நிலையில் கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கமக்கார அமைப்புகள் அறிவித்துள்ளனர்.

இரணைமடுக் குளத்தின் கீழும் மற்றும் ஏனைய பிரதேசங் களிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளினால் நெற் பயிர்ச் செய்கை நாசமாக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு கமக்கார அமைப்புகள் கால் நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும், அவ்வாறு கட்டி வளர்க்காது கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக் கப்பட்டால் கூலியாக 500 ரூபா அறவிடப்படும் எனவும் கால்நடைகள் ஏலத்தில் விடப்படும் எனவும் கமக்கார அமைப்புகள் அறிவித்துள்ளன. (உ-கே)

## கந்த சஷ்டி மகோற்சவம்

வடமராட்சி பொலிகண்டி கந்தவன சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான கந்தஷஷ்டி மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு தாரகன் போரும் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சிங்கன் போரும் செவ்வாய்க் கிழமை இரவு 7மணிக்கு சூரசம்காரப்போரும் புதன்கிழமை காலை 6 மணிக்கு பாறனைப்பூசையும் நடைபெறும் தொடர்ந்து தீர்தோற் சவமும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும் வியாழக் கிழமை மாலை 5 மணிக்கு திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

இத்துடன் பகல் உற்சவம் காலை 10மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2 மணிக்கு நிறைவுபெறும் இரவு உற்சவம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8 மணிக்கு நிறைவுபெறும் எனவும் காலை 8 மணிமுதல் காலை 10 மணிவரை சூரன்போர் புராணபடலம் இடம் பெறும் என ஆலய ஆதீன கர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (116)

## ஆலயப் புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

கந்தரோடை அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் கோயில் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தில் உள்வீதி மண்டபங்கள், வெளிமண்டபம் மற்றும் தேர்த்தரிப்பிடம் என்பன அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது. ஆலய அடியார்களின் பொருள் உதவி, பண உதவியுடன் ஆலயத் திருப்பணி வேலைகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. (10)

## நூலகக் கண்காட்சி

(பருத்தித்துறை)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் நூலகக் கண்காட்சியும் நூலக போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக நிதி முகாமைத்துவப் பேராசிரியர் நடராஜா சுந்தரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (உ-109)

# வீதிகளைப் புனரமையுங்கள் இல்லையேல் பதவி விலகுங்கள்

## வவுனியா நகர மக்கள் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பல வீதிகளும் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்படும் நிலையில் நகர சபையின் உறுப்பினர்களுக்கு அறிவித்தும் ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லையாயின் பதவிவிலகி அபி விருத்தி பணிகளை செய்யவல்லவர்களுக்கு வழிசமைத்து கொடுங்கள் என வவுனியா நகர மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரசபைக்குட்பட்ட மில் வீதி, கந்தசாமி கோவில் வீதி,கதிரேசன் வீதி, குடி யிருப்பு உள்ளகவீதிகள், வைத்தியசாலை வீதி என்பன உட்பட பல அத்தியாவசிய வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட வவுனியா நகர வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களே இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், எமது பிரதேசத்தின் அபிவிருத்தி வேண்டியே நாம் நகரசபை தேர்தலில் வாக்களித்திருந்தோம். எனினும் பதவியேற்றவர்கள் தமக்கிடையிலான பகைமை மற்றும் உள்ளக முரண்பாடுகளால் அபிவிருத்தி என்ற செயற்பாட்டை விடுத்து வெறும் அறிக்கை வெளியிடும் நிலையில் காணப்படுகின்றனர். வெறுமனே ஆக்ரோசமான கருத்துக்களை பத்திரிகைகள் மற்றும் வானொலிகளில் விடுவதை தவிர நகரசபையின் ஆளும் கட்சியினர் எதனையும் செய்துவிடவில்லை.

எனவே நகரசபை உறுப்பினர்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாவிட்டால் பதவிகளை இராஜினாமா செய்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க கூடியவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும என தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு வவுனியா நகர சபையை தமிழ் தேசிய கூட்டமைப்பு பொறுப் பேற்றதில் இருந்து பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (125)

## ஆண்டு நிறைவு விழாவும் சிறப்புமலர் வெளியீடும்

(யாழ்.நிருபர்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 135 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும் சிறப்புமலர் வெளியீடும் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் ஓய்வுநிலை அதிபர் அ.வேலுப்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் திருமதி.பகீரதி ஜீவேஸ்வரராசனன் வெளியீட்டுரை நிகழ்த்து வார். ஆசிரியர் ந.குகபரன் நூல் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார். (10)

## இடமாற்ற நிராகரிப்புத் தொடர்பாக கடிதம் மூலம் அறிவிக்குமாறு கோரிக்கை

இடமாற்றம் தொடர்பாக வலயங்களில் விண்ணப்பித்துள்ள ஆசிரியர்களுக்குத் தமது இடமாற்ற நிராகரிப்புத் தொடர்பாக சில வலயங்கள் உரிய முறையில் கடிதங்களை அனுப்பிவைக்க வில்லை என ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

2012ஆம் ஆண்டிற்கான இடமாற்றங்களுக்கான விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்ட போதும் தங்களை இடமாற்றம் பெறுவதற்கு தகுதியா அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதை எழுத்து மூலம் அறிவிக்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இடமாற்ற நிராகரிப்புத் தொடர்பாக மேன்முறையீட்டை வட மாகாணக் கல்விப்பணிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர் மூலமோ அல்லது தனக்கோ தெரியப்படுத்துமாறு அறிவித்துள்ளார். ஆனால், தம் நிராகரிப்பு தொடர்பாக எழுத்து மூலமான கடிதங்கள் எவையும் கிடைக்காததையிட்டு சில கல்வி வலயத்திலுள்ள ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். எனவே, தமது மேன்முறையீட்டிற்கு ஆவன செய்வதற்கு தம்மை நிராகரிப்பதற்குரிய சரியான காரணத்தை குறிப்பிட்டு கடிதங்களை அனுப்பி வைக்குமாறு ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

# விவசாய உற்பத்திகளை அதிகரிக்க நடவடிக்கை

(வவுனியா)

வவுனியாவில் காலபோகத்திற்கு 19 ஆயிரத்து 438 ஹெக்டெயரில் நெற் செய்கை செய்வதற்கு உத்தே சிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஜெ. ஜெகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் ,

கடந்த ஆண்டு 17 ஆயிரத்து 524 கெக்டெயரில் நெற் செய்கை செய்யப்பட்டபோதிலும் 15 ஆயிரத்து 724 ஹெக்டெயரிலேயே அறுவடை செய்ய முடிந்திருந்தது. ஏறத்தாழ 4500 ஏக்கர் நெற் செய்கை வெள்ளம் காரணமாக அழிந்திருந்தது எனவும் வெள் ளத்தினால் விளைச்சலும் குறைந்திருந்தமையினால் 56482 மெட்றிக்தொன் நெல்லினையே உற்பத்தி செய்ய முடிந்ததாகவும் எனினும் இம்முறை அதனைவிட அதிகளவில் விளைச்சலை உண்டு பண்ண எண்ணியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை உழுந்து 6500 கெக்டெயரிலும், பயறு 620 கெக்டெயரிலும் சின்ன வெங்காயம் 66 கெக்டெயரிலும் கௌப்பி 9[illegible] கெக்டெயரிலும், நிலக்கடலை 1050 கெக்கெடயரிலும், சோளம் 416 கெக்டெயரிலும், குரக்கன் 31 கெக்டெயரிலும் மரக்கறி 1004 கெக்டெயரிலும் உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன் வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்கு விதைகளை வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (125)





யாழ். பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் வருடாந்த கலாசார விழா அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றபோது யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையுரையாற்றுவதையும், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நாடகத்துறைக்கான யாழ் ரத்தினா விருதை சி. எம். நெல்சனுக்கு வழங்குவதையும் காணலாம். ஸ்ரீ52

## நாள்காட்டி வெளியீடு

(யாழ்.நிருபர்)

காரைநகர் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய 2012 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி வெளியீட்டு விழா எதிர்வரும் 30 திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயமண்டபத்தில் சோமசுந்தரம் பரமசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆசியுரையை அமெரிக்காவில் இருந்து வருகை தந்துள்ள ம.சிவயோகசுந்தரம் வழங்கவுள்ளார். ஆலய நிர்வாகஸ்தரின் வெளியீட்டுரையைத் தொடர்ந்து ஓய்வு நிலை அதிபர் ந.பரமசிவம் சிறப்புரையாற்றுவார். முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களின் முதியோன் புனைந்த மொழி "கவிதையை சங்கீத கலா வித்தகர் சி.சிவாஞானராசா வழங்குவார்.

தொடர்ந்து நாள்காட்டி வெளியீடும் திருமுறை ஓதல் நிகழ்வும் இடம்பெறும். (10)

# எமது உயர் பண்பாடு, கலாசாரம் குறித்து இளையோருக்குத் தெளிவுபடுத்த வேண்டும்

## தமிழ்த் துறை பேராசிரியர் பா.இரகுநாதன்

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 வருட காலமாக நடைபெற்று வந்த யுத்தத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பெருமளவில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதுடன் கலாசாரப பிறழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமிழ்த்துறைப் பேராசிரியர் மா.இரகுநாதன் தெரிவித்துள்ளார். யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடாத்தும் 2011ஆம் ஆண்டின் கலாசார விழா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திருமலைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் யாழ்.பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகை யில்,

பெரும்பாலான கோயில்களுக்கு நாம் போகும் போது முதலில் எங்களை வரவேற்பது கற்பூரம் விற்கும் சிறுவர்கள் தான். இவர்கள் யார்? தந்தையை தாயை உறவுகளை இழந்து நாதியற்று விடப்பட்டவர்கள்.பெண்கள் மிகவும் குறைந்த வயதில் நிர்ப்பந்திக்கப்பட்டு திருமணமாகி 10 நாட்கள் கூட வாழாத நிலையில் விதவையாக்கப்பட்டுள்ளனர். பாலியல் பலாத்காரம் எல்லா இடங்களிலும் ஏற்படுகின்றது. இதற்கு அரசாங்க அதிபர் கூடிய அக்கறை எடுத்துள்ளார்.

பெண் ஒருவர் பாதிக்கப்பட்டாள் என்றால் அவள் கற்பிழந்தவள் என்று சமூகத்தில் ஒதுக்கப்படுகின்றாள். ஆனால ஆண்கள் மட்டும் தப்பிச் செல்கின்றனர். ஆனால் அதற்கு ஆண்களும் காரணமானவர்களாகவே இருக்கின்றார்கள்.

100 வருடகால ஆலயங்கள் கட்டடங்கள் தடையாக இருக்குமானால் அதை அகற்றக் கூடாது என நினைக்கின்றோமே தவிர மனிதனைக் காப்பாற்ற நினைக்கவில்லை. எமது உயர் பண்பாட்டைக் கடடிக்காக்க வேண்டும் இளையோர் மத்தியில் இவற்றைத் தெளிவுபடுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக பொருளியல் துறைப் பேராசிரியரான பா.சிவநாதன் ஆகியோரும், பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



பூநகரி, பள்ளிக்குடா - மண்டைக்கல்லாறு புனித அந்தோனியார் ஆலயம் இது. பல ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்த ஆலயம் யுத்த காலத்தில் கவனிப்பாரற்ற நிலையிலும், கடல் அரிப்பினாலும் சேதமடைந்து காணப்படுகிறது. தற்போது பாசையூர் மக்களின் நிதியுதவியினால் புனரமைப்பிற்கென ஆலய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## வேலாயுதத்திற்காக வவுனியாவில் தடியடி

(வவுனியா)

வவுனியாவில் தீபாவளி தினத்தன்று இரசிகர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தியுள்ளனர். இச்சம்பவம் வவுனியா வசந்தி திரையரங்குக்கு முன்னாள் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, தீபாவளி தினத்தன்று வவுனியா வசந்தி திரையரங்கில் விஜயின் வேலாயுதம் திரைப் படம் திரையிடப்பட்டது.

படத்தைப் பார்ப்பதற்கு விஜய் இரசிகர்கள் குவிந்ததால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் இரசிகர்களை ஒழுங்கு படுத்தமுற்பட்டுள்ளனர். இதன் போது பொலிஸாருக்கும் இரசிகர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு இரசிகர்கள் பொலிஸார் மீது செருப்புகளை வீசினர் இதனால் கூட்டத்தை கலைக்க பொலிஸார் தடியடி நடத்தினர் இதனால் இருதரப்புக்கும் இடையில் சலசலப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தினால் வவுனியா கண்டி வீதியில் சில மணி நேரம் பதற்றம் ஏற்பட்டது. மேலும் டிக்கெட் கிடைக்காததால் விஜய் இரசிகர்கள் திரையரங்குக் கண்ணாடிகள் மற்றும் யன்னல் போன்றவற்றை உடைத்துள்ளனர். (125)

## விவசாய விதை பொருட்கள் வவுனியாவில் வழங்கல்

(வவுனியா)

வவுனியாவில் தெரிவுசெய்யப்பட்ட இரு கிராமங்களான ஓமந்தை மற்றும் உலுக்குளம் கிராமங்களில் ஜி.ரி.சட் நிறுவனத்தின் ஊடாக விவசாயிகளுக்கு விதை உற்பத்தப் பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

இக்கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஓமந்தையில் ஒருவருக்கு நான்கு ஏக்கர் வீதம் 2808 புசல் நெல்லும் உலுக்குளத்தில் 474 புசல் நெல்லும் வழங்கப்படவுள்ளதுடன் அதனை பெறாதவர்களுக்கு அரை ஏக்கருக்கு உழுந்து, பயறு, கௌப்பியும் வழங்கப்படவுள்ளதுடன் இவர்கள் அனைவருக்கும் வீட்டுத் தோட்டத்திற்கான விதைகளும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை விவசாய வெளிக்கள போதானாசிரியர் பிரிவு ரீதியாக வீட்டுத் தோட்டப்போட்டி இடம்பெற்று முடிந்துள்ள நிலையில் தற்போது மாவட்ட ரீதியாக சிறந்த வீட்டுத்தோட்ட விவசாயியை தெரிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (125)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(29.10.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஐப்பசி 12 ஆம் நாள்.
இராகுகாலம் 09.03–10.33,
சுபநேரம் 03.03 –4.33,
நட்சத்திரம்: அனுஷம் மாலை 6.40 வரை
திதி: திருதியை மு.இ. 08.05 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணக்கஷ்டம், நண்பர் வருகை, இனசன அழைப்பு, பிணக்கு ஏற்படல், தொழில் நட்டம்.

**ரிஷபம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசு வரும், அதிகாரப் போட்டி, புதுப் பொருள் சேரும், சுற்றத்தார் ஆதரவு.

**மிதுனம் :**– பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, முக்கிய முடிவு எடுத்தல், வீண்கோபம்.

**கடகம்:**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், அதிஷ்ட வரவு, தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**சிம்மம்:**–பணக்கஷ்டம், வசதிக்குறைவு, தேகசுகம் பாதிப்பு, சுற்றத்தார் ஆதரவு, தேகநலமின்றி வைத்தியசாலைச் செலவு.

**கன்னி :**– குடும்பத்தில் குதூகலம், பணம்வரும், நினைத்ததைச் சாதித்தல், தொழில் வெற்றி, தேகசுகம்.

**துலாம் :**– பணக்கஷ்டம், வாய்ப்புக்களை இழத்தல், மனக்கவலை, மேலதிகாரிகள் சினம், தெருவிபத்து.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் அதிக மகிழ்ச்சி, காசுவரும், மேலதிகாரிகள் பாராட்டு, தேகநற்சுகம், உற்சாகம்.


**தனுசு:**– பணக்கஷ்டம், மனக்கவலை, நண்பர் வருகை, சகோதர வெறுப்பு, வீணாக ஆத்திரப்படல்.

**மகரம:**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், சுற்றத்தார் ஆதரவு, கடன்வசூல், எதிரியை வெல்லுதல்.

**கும்பம் :**– பணம்வரும், அதிகாரப் போட்டி, வீட்டில் சேதம், கடன்வசூல், எதிரியை வெல்லுதல்.

**மீனம்:**– குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், வீண்கோபம், நினைத்ததைச் சாதித்தல், கடன் வாங்குதல்.

## "முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி" பருத்தித்துறையில் செயலமர்வு



சிறுவர் அபிவருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் கீழ் பருத்தித்துறை செயலகம் நடத்திய இளைஞர் யுவதிகளுக்கான முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி என்னும் தலைப்பிலான நிகழ்ச்சித்திட்டம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இதில் வளவாளராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் மற்றும் பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியை திருதி எம்.சிறிதரன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலக முன்பள்ளி பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் இ.அமலன் ஆகியோர் கலந்துகொண்டனர். பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இதில் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு, பிள்ளைகளின் உரிமம், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திக்குத் தேவையான வீட்டுச் சூழல் தொடர்பாக கருத்துக்கள் வழங்கப்பட்டன. சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் குழந்தை வளர்ப்பு சம்பந்தமான இறுவட்டுக்கள் காட்சிப்படுத்தப்பட்டது. (116)

## கூட்டுறவு தின விழாவும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் ஸ்தாபகர் தலைவர் அமரர் சு.நடேசு, மறைந்த முகாமையாளர் அமரர் க.சந்திரராசா நினைவு தினமும் கூட்டுறவு தின விழாவும் புலமைப்பரிசில் வழங்கலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் கொத்தணியின் கலையரங்க மண்டபத்தில் வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைவர் செ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.சீவரெத்தினம், வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் த.சிவலிங்கம், வலிகாமம் கொத்தணி முன்னாள் தலைவர்களான சி.அன்னலிங்கம், நா.கணேசன், க.மெய்யழகன், செ.செல்வரத்தினம ஆகியோா கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.பாலச்சந்திரன், கலால் பொறுப்பதிகாரி த.நந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி தலைமைக் காரியாலய அலுவலர் இ.விஜயமோகனராஜா, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் தி.வித்தககலாநிதி மற்றும் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்கள், கௌரவிப்பு, புலமைப்பரிசில் வழங்கல், சிறந்த அங்கத்தவர் மற்றும் பணியாளர் கௌரவிப்பு சிறந்த சங்கத்திற்கான பரிசில் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளது. (உ)

## மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம் மற்றும் விஞ்ஞான பீடம் ஆகியவற்றுக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான (2010/2011) அறிமுக விழா நிகழ்வு எதிர்வரும் 2ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புதுமுக மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறும், மேற்படி பீடங்களின் ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளும் அன்றைய தினம் ஆரம்பமாகும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (உ)

## நட்புறவுக் கால்பந்து சென் ஜோன்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கெதிரான நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் மூன்று பிரிவுகளில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளுக்குமான நட்புறவுக் கால்பந்துப் போட்டி நேற்று சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

14, 16, 18, 20 ஆகிய நான்கு வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டி இடம்பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சென் ஜோன்ஸ கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியிலும் 3-0 என்ற கோல் கணக்கில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சிறப்பான வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே சிறப்பான ஆட்டத்தை இறுதி வரை வெளிப்படுத்தியிருந்தபோதிலும் கோல் எதனையும் போட முடியவில்லை. இப் போட்டி சமனிலையில் நிறைவுபெற்றது.

20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

### பிறிமா வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

## வட, கிழக்கு மாகாண அணியில் அதிக யாழ். மாவட்ட வீரர்கள்

(யாழ்ப்பாணம்)

மாகாணங்களுக்கிடையில் நடைபெறவுள்ள பிறிமா வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான வடக்கு, கிழக்கு மாகாண அணி இன்று கொழும்பு பயணமாகின் றது. இந்த அணியில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் வீரர்களே அதிகம் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பிறிமா வெற்றிக் கிண்ணத் தொடரின் மாகாண தெரிவு அணிகளின் 15 வயதுப் பிரிவுக்கான ஒரு நாள் போட்டி நாளை மறுதினம் முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் வட,கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் வடக்கு, மேற்கு என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு அணிகள் மோதுகின்றன.

இதில் முதல் இரு இடங்களைப் பிடித்துக்கொள்ளும் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெறும்.

இப்போட்டிகள் கண்டி பல்லேகல, வெலகெதர போன்ற மைதானங்களில் நடைபெறவுள்ளது. வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் யாழ். மாவட்டம் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாணம் சார்பாகப் போட்டியிடவுள்ள தெரிவு அணி இன்றைய தினம் கொழும்பு செல்கின்றது.

வட மாகாணத் தெரிவு அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் வருமாறு: எஸ். கொலின் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), டபிள்யூ. வைகரன், பி. ஜனவதீஸ் சர்மா (யாழ். இந்துக் கல்லூரி), பி. துவாரகசீலன், எஸ். கபில்ராஜ், ஏ. கனாமிர்தன், ஆர். பிரிசங்கர், ஏ. நிலோஜன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), கே. கதீன் (ஸ்கந்ரதவரோதயாக் கல்லூரி), கே. பபிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி. நிருஷாந் (வவுனியா தமிழ் மத்திய ம.வி.), சி. பானுஷன் (வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), டி.எம். கௌசலா (வவுனியா மடுகந்த ம.வி), ஆர். மதன்ராஜ் (மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி), எஸ். தனுசன், ஆர். ரஜீவன் (கிளிநொச்சி ம.வி.)

## விடேச தேவையுடையோர் விளையாட்டு இன்று

விளையாட்டு செய்திகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளின் விசேட தேவையுடைய வீர, வீராங்கனைகளுக்கான விளையாட்டுப் போட்டி இன்றைய தினம் முதல் நாளை வரை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத் தில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருநதினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும், சிறப்பு விருந்தினராக வடமாகோண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவனும் கலந்து கொள்ளவுள்ளனர். (எஸ்)



யாழ். கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணியினரைக் காணலாம். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி கோட்ட சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

## விரைவில் நடத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கோட்ட மட்டக் கால்பந்துப் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் வலய மட்டக் கால்பந்துப் போட்டிகளை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கோட்ட மட்டப் போட்டிகள் யாவும் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில் வலய மட்டப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதற்கான போட்டி நிரல் விரைவில் வெளிவரும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மாவட்ட மட்ட கூடைப்பந்து கிண்ணம் வென்றது பமிலியஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் மின்னொளியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் பெண்கள் பிரிவில் பமிலியஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

சர்வதேச லயன்ஸ் கழகம் 301B அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் பெண்களுக்கான இறுதிப் போட்டி நேற்று இரவு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் பமிலியஸ் அணியும், பட்டர்பிளஸ் அணியும் மோதின.

இதில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய பமிலியன் அணி 24-04 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இடையிடையே மழை குறிக்கிட்ட போதிலும் வீராங்கனைகள் சளைக்காது விளையாடி முடித்தமை குறிப்பிடத்தக்கது. (93)

## ரஞ்சியில் கங்குலி

(கொல்கத்தா)

ஓய்வு பெற்ற இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் 39 வயதான சவுரவ் கங்குலி, ரஞ்சி கிரிக்கெட்டில் மீண்டும் களம் இறங்கவுள்ளார்.

வருகிற 3 ஆம் திகதி தொடங்கும் 2011-2012ஆம் ஆண்டுக்கான ரஞ்சி போட்டித் தொடரில் பங்கேற்கும் பெங்கால் அணியில் அவரும் இடம்பெற்றுள்ளார்.

அந்த அணிக்கு கப்டனாக மனோஜ் திவாரி செயற்படுவார். கங்குலி தொடர்ந்து உடற்பயிற்சி செய்து, உடல் தகுதியுடன் உள்ளார். இந்த ரஞ்சி தொடர் முழுவதும் அவர் இடம்பெறுவார். அவரது வருகை இளம் வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் என்று பெங்கால் தேர்வு குழு தலைவர் தீப் தாஸ்குப்தா தெரிவித்தார்.

கடந்த ரஞ்சி தொடரில் கங்குலி 2 ஆட்டத்தில் விளையாடி 13 மற்றும் 7 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எனது வெளியேற்றத்திற்கு கிளார்க்கின் பங்கே அதிகம்

(சிட்னி)


அணியை விட்டு என்னை நீக்கியதில் கப்டன் கிளார்க்கின் பங்கும் அதிகம் என்பதை மறுக்க முடியாது, இதனைக் கூறும்போது நான் நேரடியாக நேர்மையாகவே இருக்கிறேன் என்று உறுதிபடக் கூற முடியும் என்று சைமன் ஹடிச் தெரிவித்துள்ளார்.

அணித் தேர்வாளர்கள் மட்டுமே என்னை வெளியே அனுப்பக் காரணமில்லை என்பதை கண்டுபிடிக்க ஒருவர் ஐன்ஸ்டீனாக இருக்கவேண்டிய அவசியமில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வறையில் ஏற்பட்ட சண்டை எனக்கு சாதகமாக இல்லை என்று எனக்கு தெரிகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால் சைமன் ஹடிச்சின் இந்தக் கருத்தை கிளார்க் கடுமையாக மறுத்துள்ளார்.


ஓய்வறைச் சம்பவத்திற்குப் பிறகும் நாங்கள் சேர்ந்து விளையாடியிருக்கிறோம் அப்போது ஒருவருக்கொருவர் நட்பு ரீதியாகவே பழகினோம், இதானால் அந்த ஓய்வறைச் சம்பவத்தை மனதில் வைத்து நான் இவரது வெளியேற்றத்த்ற்கு காரணமாக இருக்கிறேன் என்று கூறுவது முறையாகாது என்று கூறியுள்ளார்.





துருக்கியிலுள்ள இஸ்தான்புல் நகரில் நடைபெறும் டபிள்யூ.டி.ஏ. சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரின் ரவுண்ட் ரொபின் சுற்றில் சீனாவின் லிநா டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வீழ்த்தினார்.

## எதற்கு மன்னிப்பு கேட்க வேண்டும்




(கயானா)

நான் எதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்பதை மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை தெளிவாக விளக்க வேண்டும் என மேற் கிந்தியத்தீவு அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்தார்.

எது பற்றி நான் மறுப்புத் தெரிவிக்க வேண்டும் மற்றும் என்ன நிபந்தனைகள் ஆகியவற்றையும் சரியாகக் கூற வேண்டும். எனது மனதில் என்ன உள்ளது என்பது பற்றி அறியும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களிடம் நான் கூறிக்கொள்வது என்னவென்றால், தற்போது நான் ரீஜினல் சூப்பர்50 போட்டியில் ஜமைக்கா அணிக்காக விளையாடி வருகிறேன். அந்தத் தொடரை வெல்வதில் எனது கவனம் உள்ளது. இந்த போட்டித் தொடர் முடிந்ததும் மன்னிப்பு கேட்கும் விவகாரம் பற்றி பேசிக் கொள்ளலாம். என்னை பொறுத்தவரை மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பவில்லை என்றே நினைக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருமண பந்தத்தில் இணைந்தார் கம்பீர்



(புதுடில்லி)

கம்பீர் - நடாஷா திருமணம் நேற்று டில்லி அருகேயுள்ள குர்கானில் உள்ள பண்ணை வீட்டில் கோலாகலமாக நடந்தது. இதில் நெருங்கிய உறவினர்கள் நண்பர்கள் மட்டும் கலந்து கொண்டனர்.

இதில் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், நடிகர் ஷாருக்கான் ஆகியோர் நேரில் வந்து மணமக்களை வாழ்த்தினர். திருமண விழாவில் பிரபல பாடகர் ரகாத்பதே அலிகானின் கச்சேரி நடந்தது. திருமணம் காரணமாக கம்பீர் இன்று நடைபெறும் ருவென்ரி 20 ஓவர் போட்டியில் விளையாடவில்லை. அணி வீரர்களும் கொல் கத்தாவில் பயிற்சியில் ஈடுபட்டு இருப்பதால் திருமணத்தில் பங்கேற்கவில்லை. திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கிரிக்கெட் பிரபலங்கள், நடிகர்- நடிகைகள், பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கடந்த ஒரு வருடமாக இருவரும் காதலித்து வந்த நிலையில் நேற்றைய தினம் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரீஸ் ஓப்பன் பட்மின்ரன் சய்னா அதிர்ச்சித் தோல்வி



(பரிஸ்)

பிரெஞ்ச் ஓப்பன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்திய வீராங்கனை சய்னா நேவல் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

பரிசில், பிரெஞ்ச் ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் செய்னா நேவல், சீனாவின் எக்ஸ்யுரி லீயை எதிர்கொண்டார். போராடிய செய்னா நேவல் 18-21, 29-30 என்ற நேர் செட்டில் அதிர்ச்சித் தோல்வி அடைந்து, காலிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் அஜய் ஜெயராம், சீனாவின் ஜின் செனை சந்தித்தார். இதில் அஜய் ஜெயராம் 19-21, 14-21 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்து வெளியேறினார்.

பெண்கள் இரட்டையர் பிரிவு இரண்டாவது சுற்றில் இந்தியாவின் ஜுவாலா கட்டா, அஷ்வினி பொன்னப்பா ஜோடி, தென்கொரியாவின் ஜங் இயன் ஹா, மின் ஜங் கிம் ஜோடியைச் சந்தித்தது. இதில் இந்திய ஜோடி 13-21, 12-21 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்து ஏமாற்றியது.

## பாகிஸ்தானியரை நியமிப்பதே சிறந்தது



(லாகூர்)


பாகிஸ்தான் அணியின் அடுத்த பயிற்றுவிப்பாளராக பாகிஸதானியர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டுமென அந்த அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் வக்கார் யூனிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் சிம்பாப்வேக்கான கிரிக்கெட் தொடரின் பின்னர் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து வக்கார் யூனிஸ் விலகியிருந்தார்.

தமது நாட்டுக்குள் இருந்து ஒருவர் பயிற்சியாளராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் கட்டமைப்பினை சிறப்பாக புரிந்து கொள்ள முடியும். அதன் மூலம் அணியின் வளர்ச்சி சிறந்த முறையில் உயரும். அத்துடன் இலகுவாக புரிந்துணர்வும், நாட்டுப் பற்றும் அவர்களிடம் அதிகம் இருக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது அணியின் இடைக் கால பயிற்றுவிப்பாளராக மொய் சின்கானை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சச்சினைச் சந்திக்க காத்திருக்கும் பிரபலம்



சச்சினை சந்திக்க காத்திருக்கிறேன் என்று ஜேர்மனியைச் சேர்ந்த கார் பந்தய வீரர் மைக்கல் ஷுமொக்கர் தெரிவித்துள்ளார்.

கடைசியாக நாங்கள் இருவரும் எப்போது சந்தித்தோம் என்பது எனக்கு நினைவில்லாவிட்டாலும்கூட அவரை சந்திக்கும் நேரத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

எனக்கு ஷுமொக்கர் போன்ற நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனாலும் என்னுடைய ஆதரவு போர்ஸ் இந்தியாவுக்கே என்று சச்சின் முன்னதாகவே கூறியிருந்தார்.

## சச்சினின் அன்றைய தீர்மானம் என்னை கண் கலங்க வைத்தது

(மும்பை)

சச்சின் கப்டன் பதவியில் இருந்து விலகியபோது கண்ணீர்விட்டதாக இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் செயலர் ஜெயவந்த் லீலே கூறியுள்ளார்.

கிரிக்கெட் நிர்வாகத்தில் தனது அனுபவத்தை ஜெய்வந்த் லீலே புத்தகமாக எழுதியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

சச்சின் சிறந்த கப்டனாக செயற்படவில்லை. அவர் சிறந்த வீரர் என்றாலும், அவரால் தன்னை சிறந்த கப்டனாக நிரூபிக்க முடியாமல் போனது. அவர் கப்டன் பதவியில் விலகியபோது நான் கண்ணீர்விட்டு அழுதேன்.

அவர் கப்டனாக இருந்தபோது அவருடன் கலந்துரையாடியதை என்னுடைய அதிர்ஷ்டமாக கருதுகிறேன். அவர் கப்டனாக இருந்த காலத்தில் பலருடைய அறிவுரைகளைக் கேட்டதே அவருக்கு பிரச்சினையாக அமைந்தது.

1999-2000ஆம் ஆண்டில் மும்பையில் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி மோசமான தோல்வியைச் சந்தித்தது.

இதையடுத்து இந்திய அணியின் மீதும், குறிப்பாக சச்சினின் கப்டன் பதவி மீதும் கடுமையான குற்றச்சாட்டு எழுந்தது. போட்டியின் இரண்டாவது நாளிலேயே தென்னாபிரிக்கா பெரிய வெற்றி பெறும் என்று தெரிந்துவிட்டது.

இதனால் மனமுடைந்த சச்சின், அன்று மாலையே கப்டன் பதவியில் இருந்து



வெளியேறுவதாக ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார். அது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இந்த டெஸ்ட் தொடரில் இன்னும் ஒரு போட்டி உள்ளது என்ற நிலையில் சச்சினின் மனதை மாற்ற முயன்றேன். ஆனால் அவரோ ராஜினாமா முடிவில் பிடிவாதமாக இருந்தார். தான் மனரீதியாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், உடனடியாக வெளியேறுவதாகவும் கூறினார்.

இதையடுத்து பிசிசிஐ தலைவர் துங்கர்பூர், முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி ஆகியோர் அவரிடம் பேசியும் அவர் ராஜினாமா முடிவில் பிடிவாதமாக இருந்தார். இதையடுத்து கடைசி முயற்சியாக நானும், ரவி சாஸ்திரியும் அவரின் மனைவி அஞ்சலியை அணுகினோம்.

எப்படியோ சச்சின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு தலைமை வகித்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆசியாவில் வெல்ல மாற்றங்கள் தேவை



(லண்டன்)

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர்பான அணுகுமுறையில் எமது வீரர்கள் சில மாற்றங்களை மேற்கொள்ளும் பட்சத்திலேயே ஆசிய நாடுகளில் வெற்றியீட்ட முடியும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியுடனான ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் முழுமையாக இழந்ததை அடுத்து அவர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் போட்டிகளில் பங்குபற்றும் போது ஆடுகளத்திற்கு ஏற்றவாறு தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இங்கிலாந்து அணி இறுதியாக விளையாடிய 20 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஐந்தில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடர்ந்து தக்க வைத்திருப்பதில் மகிழ்ச்சி

நான் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக முதல் நிலை இடத்தை தக்க வைத்திருப்பது சிறப்பு வாய்ந்தது என ரென்னிஸ் வீராங்கனை வோஸ்னியாக்கி தெரிவித்துள்ளார். ஆண்டின் இறுதியில் மீண்டும் ஒரு முறை முதல் நிலை இடத்தில் இருப்பது வியப்புக்குரியது. ஏனெனில் ஒரு சில வீராங்கனைகள் மட்டுமே வருடத்தின் கடைசியில் முதல் நிலை இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதுவும் நான் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக இந்த இடத்தை தக்க வைத்திருப்பது சிறப்பு வாய்ந்தது. எனது ரென்னிஸ் வாழ்க்கையில் இது தான் தொடக்கம். ஏற்கனவே பல சாதனைகளை செய்து விட்டேன். இதன் மூலம் எனது கனவு நனவாகி உள்ளது என்றார்.

முதல் நிலை வீராங்கனையாக வோஸ்னியாக்கி வலம் வந்தாலும் இதுவரை எந்த கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் கிண்ணத்தை வெல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## காலிறுதியில் போபண்ணா ஜோடி

(வியன்னா)

எர்ஸ்ட் பாங்க் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் ரோகன் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி முன்னேறியுள்ளது. ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில், எர்ஸ்ட் பாங்க் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி, பிரேசிலின் மார்சிலோ மேலோ, புரூனோ சோரஸ் ஜோடியை எதிர்கொண்டது.

முதல் செட்டை பிரேசில் ஜோடி 6-2 என மிகச் சுலபமாக வென்றது. பின் எழுச்சி கண்ட இந்திய-பாகிஸ்தான் ஜோடி, டை-பிரேக்கர் வரை நீடித்த இரண்டாவது செட்டை 7-6 எனக் கைப்பற்றியது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் சூப்பர் டை-பிரேக்கர் சுற்றில் மீண்டும் அசத்திய போபண்ணா ஜோடி 10-4 என தன்வசப்படுத்தியது.

இறுதியில் போபண்ணா-குரேஷி ஜோடி 2-6, 7-6, 10-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதியில் போபண்ணா ஜோடி, போலந்தின் மாரியஸ் பிரைஸ்டன்பர்க், மார்சின் மாட்கோவ்ஸ்கி ஜோடியை எதிர்கொள்கிறது.

## முற்றுகிறது முரண்பாடு ஜே.வி.பி அணிகள் மோதல்

(கொழும்பு)

பிளவுபட்டிருக்கும் ஜே.வி.பி.யின் இரு அணிகளுக்குமிடையில் வலுவடைந்து வரும் முரண்பாடு மோதலில் முடிவடைந்துள்ளது. ஜே.வி.பி.யின் குமார் அணியினருக்கும், ரில்வின் சில்வா அணியினருக்கும் இடையில் ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் மோதல் ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது. இந்த மோதலில் குமார் அணியின் முன்னணி செயற்பாட்டாளரான சமீர கொஸ்வத்த என்பவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

ரில்வின் சில்வா அணியினர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர். கொஸ்வத்த நடத்திய கூட்டத்திற்கு சென்ற ரில்வின் அணியினர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனால் இரண்டு தரப்புக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

## பிரட்றிகா ஜேன்ஸ் மீது கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

பாரதலக்ஷ்மன் கொலைச்சம்பவம் குறித்து வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக பத்திரிகையாளர் பிரட்றிகா ஜேன்ஸ் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பிரட்றிகா ஜேன்ஸ் தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மீரிஹானை பொலிஸில் நேற்று முன்தினம் இரவு முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். தனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றின் மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் மீரிஹான பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் வெள்ளைக் கொடி விவகார வழக்கில் இவர் பிரதான சாட்சியாவார். இந்த வழக்கின் தீர்ப்பு



அடுத்த மாதம் 18 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. இதேவேளை, பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் கொலை தொடர்பில் இவரது பத்திரிகையில் வெளியான விடயங்கள் குறித்து சீற்றத்துக்கும் இவர் உட்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏனைய கட்சிகளுடனும் பேச்சு

## பான் கீ மூனிடம் கோரிக்கை



(கொழும்பு)

**தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடாத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் சந்திக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.**



அமெரிக்கா சென்றுள்ள தமிழ் தேசியக கூட்டமைப்பினரை. பான் கீ மூன் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அவரை சந்தித்த இலங்கையின் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். எனவே இனப்பிரச்சினை தீர்வு என்ற விடயத்தில் ஏனைய தமிழ் கட்சிகளுடனும் இலங்கை அரசாங்கம் பேச்சு நடத்தி வருகிறது. இந்தநிலையில் இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ரை சந்திப்பது போன்று பான் கீ மூன் ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## அரச ஆவணங்கள் திருட்டு பல்கலை மாணவர்கள் கைது

(கொழும்பு)

அரச ஆவணங்களை திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டு இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என் தினமின செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கையின் புலனாய்வுத்துறையை கோடிட்டு குறித்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனினும் எந்த பல்கலைக்கழக மாணவர்கள் என்ற விடயம் குறிப்பிடப்படவில்லை.

இவர்கள் என்ன நோக்கத்துக்காக இந்த அரச ஆவணங்களை திருடினர் என்பது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.ஜே.வி.பி.யின் கிளர்ச்சிக்குழுவின் நடவடிக்கைகளை மையமாக வைத்து இந்த ஆவணத் திருட்டு இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## விதிகளை மீறிய உறுப்பினர்கள் ஐ.தே.க. கடும் நடவடிக்கை

### சஜித் அணி கட்சிமீது அதிருப்தி

(கொழும்பு)

கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன மற்றும் மேல்மாகாணசபை உறுப்பினர் சிரால் லக்திலக்க ஆகியோரின் உறுப்புரிமையை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நிராகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இதற்கான யோசனையை கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்தார். எனினும் இக்கோரிக்கையை நிராகரித்த கட்சியின் செயற்குழு, இருவரும் முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பனவின் தலைமையிலான குழுவினால் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவர் என்று அறிவித்தது.

இந்த நிலையில் குறித்த இரண்டு உறுப்பினர்களும் மன்னிப்பு கோரினால், அவர்களுக்கு எதிராக தடையை நீக்கிக் கொள்ளலாம் என்ற யோசனையை தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார். இது சாத்தியமாகும் பட்சத்தில் இருவரினதும் கட்சி உறுப்புரிமை மீண்டும் வழங்கப்படும் என்று கட்சியின் செயற்குழு தரப்புகள் தெரிவித்துள்ளன.

கட்சியின் ஒழுங்குகளை மீறி கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கோட்டே மற்றும் மாத்தறையில் இரண்டு சுயாதீனக் குழுக்களை தேர்தலில் போட்டியிட வைத்தமையே இரண்டு பேரின் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும். இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, பகிரங்கமாக விமர்சித்த கடசியின் பிக்கு முன்னணி தலைவரான மெத்தேகொட குணரட்ன தேரரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கும் கட்சியின் செயற்குழு தீர்மானித்தது.



பொதுநலவாய உச்சிமாநாட்டிற்காக அவுஸ்ரேலியாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கை முன்னெடுத்துச் செல்ல அனுமதியளிக்காமைக்கு நன்றி தெரிவிக்கும் கடிதமொன்றை அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகராலயத்தில் இலங்கை பௌத்த பிக்குகள் குழுவொன்றினால் அமைக்கப்பட்டுள்ள சிங்கள ராவய எனும் அமைப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கையளித்தபோது.

## சீனாவின் புலமைப்பரிசில் திட்டம் இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன சீன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். கல்வி அமைச்சர் கடந்த வாரம் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இக்கோரிக்கையை சீன அரச பிரதிநிதிகளிடம் முன்வைத்துள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் சீன விஜயத்தின்போது பல்வேறு தரப்புகளுடன் இலங்கையின் கல்வி அபிவிருத்தியில் சீனாவின் ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன் போது இலங்கையில் புதிய தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் சீன மொழியை இலங்கையில் பிரபல்யப்படுத்தவும் அவ்வலைவரிசையூடாக கல்வி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்யவும் கல்வித்துறை சார்ந்தோர் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கவும் சீன அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இடம்பெயர்ந்தோருக்கான விசேட நடமாடும் சேவை

### மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் செயற்றிட்டத்தின் ஊடாக இலுப்பைக்குளம் கிராமத்தில் நடமாடும் சேவையொன்று நேற்று இடம்பெற்றது இந்த நடமாடும் சேவையில் சட்ட ஆவணங்கள் மற்றும் காலங் கடந்த பதிவுகள் உட்பட தேசிய அடையாள அட்டைப் பதிவு, பாடசாலை மாணவர்களுக்கான விசேட ஏற்பாடுகள், நிவாரணம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல், இளைஞர் யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகள், விதவைகள் மற்றும் விசேட தேவைகளுக்கு உட்பட்டவர்களுக்குரிய தேவைகளும் ஏற்பாடுகளும் உட்பட இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் காணி தொடர்பான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நடமாடும் சேவை தொடர்பாக மேலதிகமாக அறிந்து கொள்வதற்கு, உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் செயற்றிட்டம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இல.129 கந்தசாமி கோவில் வீதி வவுனியா என்ற முகவரியுடன் அல்லது 024 - 2221060 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் வரலாற்றைத் திருத்தட்டும்!

**கூட்டமைப்பினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணை குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் 2011.10.21 ஆம் திகதி ஆற்றிய உரை. நேற்றைய தொடர்சசி...**

அதேபோன்று யாழ் பழைய பூங்கா அழித்துச் சிதைக்கப்படுவதாக பொய் யான பிரசாரங்களை இவர்கள் முன் னெடுத்திருந்தார்கள். ஆனால் இப்பூங்கா மேலும் பயனுள்ளதாகவும் பழைமை யைப் பேணியும், அழகுபடுத்தியும் வெகு விரைவில் மக்களின்

பயனபாட்டிற்காக திறந்துவிடப்பட வுள்ளது என்பதை இச் சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகின்றேன்.

இதேபோன்று யாழ் மாநகர சபையால் நிறுவப்பட்டு வரும் கஸ்தூரியார் வீதி கடைத்தொகுதி விடயத்தில் முறைகேடுகள் நடப்பதாக தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் அவதூறுகளைப் பொழிந்திருந்ததோடு இவ்விடயம் குறித்து வழக்கு தொடுத்தும் இருந்தனர். • ஆனாலும் யாழ்

மாவட்ட உயர் நீதிமன்றமும், கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றமும் சரியான தீர்ப்பை வழங்கி இவர்களது போலித்தனமான பிரச்சாரங்களை அம்பலப்படுத்தியுமிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாறான மக்களை தவறாக வழிநடத்தும் சுயலாப பொய்ப்பிரசாரங்களுக்கு துரதிர்ஷ்டவசமாக சில தமிழ் ஊடகங்கள் துணைபோவது தான் வேதனையாக இருக்கின்றது. தமிழ் மக்களின் நலன்களை பாதுகாப்பதற்கும் அதைப் பலப்படுத்துவதற்கும்.

ஐக்கியம் என்பது தமிழ் கட்சிகளிடையே தேவையான ஒன்று. ஆனாலும் அது தேர்தல் வெற்றிக்காக மட்டும் இருந்து விடக்கூடாது. தமிழ் மக்கள் அடைய வேண்டிய அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதற்காகவே அந்த ஐக்கியத்தை பயன்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் நலன்களில் இருந்து ஐக்கியப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் அண்மையில் புதுடில்லி சென்று, ஒன்றாகக் கூடி, பேசிய இவர்கள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயம் குறித்து ஏன் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு அவர்களால் வந்திருக்க முடிந்திருக்கவில்லை என்று நான் கேட்கிறேன்.

ஒற்றுமையின் பலத்தை உலகுக்கு காட்டுங்கள் என்று கூறி தமிழ் மக்களின் வாக்குகளை மட்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கால காலமாக அபகரித்து வருகின்றார்கள். ஆனாலும் தேர்தல் முடிந்த கையோடு பதவி நாற்காலிகளுக்காக தமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் அசிங்கமே இவர்களது போலி ஐக்கியத்திற்குள் தெரிகின்றது. ஐக்கியத்தை பயன்படுத்தி தமிழ் மக்களின் அழிவுகளுக்கு இவர்கள் துணை போனார்களே ஒழிய எம் மக்களை அழிவுகளில் இருந்து இவர்கள் காப்பாற்ற தவறிவிட்டார்கள்.

நான் கூட பல தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நோக்கி கேட்டி ருக்கின்றேன். வன்னி யுத்தம் ஆரம்ப மாவதற்கு முதல் கூட கேட்டிருந்தேன். வாருங்கள் அழிவுகளிலிருந்து தமிழ் மக்களைக் காப்போம். அரசுடன் பேசுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடமும் கேட்டிருந்தேன். கௌரவ நாடாளு மன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா அவர்களே! தமிழ் மக்களை அழிவுகளில் இருந்து காப்பாற்ற வாருங்கள் என்று உங்களையும் இங்கிருக்கும் ஏனைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்த பலரையும் நோக்கி நான் கேட்டிருந்தது ஞாபகம் இருக்கும் என நம்புகின்றேன்.

அவ்வாறு எனது கருத்துக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நீங்கள் அன்று இணங்கியிருந்தால் இத்தனை அழிவுகளை தமிழ் மக்கள் சந்தித்திருக்க வேண்டிய துயரங்கள் நடந்திருக்காது.

திட்டமிட்ட குடியேற்றங்கள் நடப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறி வருகின்றார்கள். கடந்த காலங்களில் இவைகள் நடத்தப்பட்டன என்பது உண்மைதான். தமிழ் மக்களின் குடிப்பரம்பலில் மாற்றங்களைக் கொண்டுவரும் எந்தவொரு திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அவ்வாறு இப்போதும்

நடக்குமாயின், ஆதாரங்களுடன் அவைகள் நிரூபிக்கப்படுமாயின் நாம் அதை நிச்சயமாக எதிர்த்தே தீருவோம். எமது மக்களின் நிலம் தொடர்பான விடயத்தில் நான் எமது ஆயுதப்போராட்ட காலத்தில் கொண்டிருந்த அதே கொள்கையோடுதான் இன்னமும் இருக்கின்றேன்.

எமது விருப்பங்களைப் போல் தற்போதைய எமது அரசாங்கமும் இந்தக் கொள்கையினை கடைப்பிடித்து வருவதாகவே நான் உறுதியாக நம்புகின்றேன்.தங்களது சுய விருப்பின் பேரில் இந்த நாட்டில் வாழுகின்ற எவரும் எங்கும் வாழலாம்.

ஆனால் தமிழ் மக்களின் குடிப் பரம்பலை மாற்றக்கூடிய வகையில் அரசாங்கம் திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்தாது என்பதை நான் இங்கு உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா மக்களும் இந்த நாட்டின் பிரஜைகளே என்பது எமது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகின்றது. இதை நான் வரவேற்கின்றேன். ஆனாலும் தமிழ் மக்களுக்கு அரசியலுரிமை பிரச்சினை உண்டு. இது குறித்து நாம் அரசாங்கத்துடன் தொடர்ந்து பேசி வருகின்றோம்.

அரசியல் தீர்வு நோக்கி நாம் அரசாங்கத்துடன் கை குலுக்கி நடந்து வருகின்றோம். எமது இலட்சியம் வெல்லப்பட்டு வருகின்றது.

எமக்கென்றொரு கொள்கை உண்டு. தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நடைமுறைச் சாத்தியமான வழிமுறை எம்மிடம் உண்டு. கோட்டை கொத்தளங்கள், கொலை அச்சுறுத்தல கள், மனித வெடிகுண்டுகள் என எத்தனை தடைகள் மலையென எழுந்து எம்மை எதிர்த்து நின்ற போதும் எமது தமிழ் மக்களின் அரசியலுரிமை சுதந்திரத்திற்குத் தீர்வு காணும் எமது வழிமுறையை ஒருபோதும் மாற்றிக்கொண்ட வரலாறு எமக்கில்லை.

சரியான வழிமுறையை தேர்ந்தெடுத்தோம் என்பதற்காக் எமது உறுப்பினர்களில் பலநூறு பேர் கொல்லப்பட்டார்கள். அச்சுறுத்தப்பட்டார்கள், துரத்தப்பட்டார்கள். எமது மக்களின் எதிரிகளால் நாங்கள் தூற்றப்பட்டோம், வசை பாடப்பட்டோம். எமது இரத்தமும் தசையும் கலந்து, உழைப்பும் வியர்வையும் சேர்த்து நாங்கள் ஆற்றிய அர்ப்பணங்களுக்கு இப்போது வெற்றி கிடைத்து வருகின்றது. நாம் கொண்ட வழிமுறையே தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு தரும் வழி என்று சகல தரப்பினருமே இன்று ஏற்றுக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

எமது விருப்பங்களுக்கு அரசாங்கம் கொள்கையளவில் இணக்கம் கண்டதாலேயே எமது

கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்று செயற்படுத்தி வருகின்றது. அரசியல் தீர்வு முயற்சி முதற்கொண்டு, அபிவிருத்தி, மீள் குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயங்களை படிப்படியாக நீக்குவது, அவசரகால சடடத்தை நீக்கியமை, சரணடைந்தவர்களை புனரமைப்புக்கூடாக விடுவித்தல், எனப் பல்வேறு செயல்களையும் எமது விருப்பப்படி அரசாங்கம் ஆற்றி வருகின்றது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் விசித்திரமானவை. அரசாங்கத்தின் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்கிறார்கள். ஆனாலும் அரசாங்கத்துடன் பேசியும் வருகின்றார்கள். பேசி விட்டு அரசாங்கம் எதையும் செய்யப்போவதில்லை என்றும் கூறி வருகின்றனர்.

எமது கோரிக்கைகளாலும், அர சாங்கத்தின் கொள்கைகளாலும் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருவதை, தம்மால்தான் இவைகள் நடந்து வருகின்றன என இன்னொரு புறத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறியும் வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வீட்டுக்குள் குறட்டை விட்டு தூங்குகின்றார்கள். விடிந்ததும் தங்களது வீட்டின் கூரை மீது தாமே ஏறி நின்று கூவியதால்தான் பொழுதே விடிந்தது என்று கற்பனை செய்கிறார்கள். அறிக்கையும் விடுகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தோடு பேசி வருவதை நான வரவேற்கின்றேன். ஆனால், கடந்த காலங்களைப்போல் அன்றி, இனியாவது உண்மையாகவே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற உண்மையான நோக்கத்தோடு அவர்கள் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும் என விரும்புகின்றேன்.

பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் என்று பல்வேறு ஒப்பந்தங்களும் இங்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் இன்றைய பிரச்சினைகள் தோன்றியிருக்காது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இங்கு கூறி வருகின்றார்கள். அதை நான் ஒப்புக்கொள்கின்றேன். உண்மை தான், அன்று தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்த அரசாங்கங்களே தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினை தீர்வுக்கு தடையாக இருந்து வந்திருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள் கின்றேன். ஆனாலும் இது குறித்து திரும்பத் திரும்ப கூறி வரும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் அதற்குப் பிந்திய எமது வரலாற்று நிகழ்வுகளை எண்ணிப் பார்த்து மனந்திருந்த வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அது எமக்கு அரியதொரு வாய்ப்பு. அதை உடைத்து சிதைத்த தமிழ் தலைமைகள் தமிழ் மக்களுக்கு அதை விட பெரிதாக எதை இதுவரை எடுத்து தந்திருக்கிறார்கள்.

அதன் பின்னராக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களுடனான பேச்சுவார்த்தை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடனான பேச்சுவார்த்தை, இறுதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடனான பேச்சுவார்த்தை என தொடர்ந்து வந்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தமிழ்த் தலைமைகளே சரியாக பயன் படுத்த தவறியிருந்தன.

சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு கொண்டு வந்திருந்த தீரவுத்திட்டத்தை எதிர்த்து இதே தமிழத் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்கள் அன்று எதிர்க்கட்சிகளோடு இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்த வரலாற்றுத் துரோகங்களை வரலாறு ஒருபோதும் மறந்துவிடப் போவதில்லை.

ஆகவே, இனிவரும் காலங்களிலாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க வேண்டும். சரியான திசை வழியில் திருந்தி நடக்க வேண்டும். தமிழ் மக்களின் அன்றாட அவலங்களைத் தீர்ப்பதற்கு உழைக்காமலும், அபிவிருத்திக்காக

உழைக்காமலும் அரசியல் தீர்வு நோக்கிய சாத்தியமான பாதையையும் ஏற்று

நடக்காமலும், இதுவரை தமிழ் மக்களை சுடுகாட்டிலும், சாம்பல் மேட்டி



நாடாளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ்

லும் இறுதியாக முள்ளிவாய்க்காலுக் குள்ளும் தள்ளிவிட்டு வெளி நாடுகளுக்கு வசதியான வாழ்க்கையைத் தேடி ஓடிப்போன தமது வரலாறுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருத்திக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினை என்பது வேறு. தமிழ் மக்களின் பிரச்சினை என்பது வேறு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது தேர்தல் வெற்றிகளுக்காகவும், சுகபோக பதவி நாற்காலிகளுக்காகவும் உணர்ச்சி பொங்க பொய் பேசுகிறார்கள். பின்னர் அரசாங்கத்தோடு பின் கதவு தட்டி தமது சொந்த சலுகைகளை மட்டும் பெற்றுக்கொள்கிறார்கள். இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சினை.

ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினை அதுவல்ல. தமிழ் மக்களும் இலங்கைத் தீவின் பூர்வீக குடிமக்கள், இந்த நாட்டின் பிரஜைகள். ஆகவே அவர்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமவுரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாக இந்த நாட்டில் வாழ விரும்புகின்றார்கள். நாம் தமிழர்களாக இருப்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தையோ, அன்றி இலங்கையர்களாக இருப்பதற்காக தமிழர்கள் என்ற அடையாளத்தையோ ஒருபோதும் விட்டுக்கொடுக்க தயாரில்லை.

யாரையும் யாரும் அடிமைப்படுத்தாத, யாருடைய நிலங்களையும் யாரும் அபகரிக்காத, யாருடைய கலை, கலாசார, பண்பாடுகளையும், யாரும் அவமதிக்காத, எந்தவொரு இன, சமூக, மதம் சார்ந்த மக்களினதும் மத வழிபாட்டு சுதந்திரங்களை கட்டுப்படுத்தாத எல்லா மொழிகளும் சமன் என்று ஓங்கி ஒலிக்கும் உயர்ந்த இலட்சிய பண்புகளோடு எமது இலங்கைத் தீவு துலங்க வேண்டும். இதுவே எங்களதும் தமிழ் மக்களினதும் விருப்பங்களாகும்.

தமது சுயலாப அரசியலுக்காக வெறுமனே உணர்ச்சி பொங்க பேசி கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் தட்டிக்கழித்து தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக நீடித்துச் செல்ல விரும்பும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் போலன்றி தமிழ் மக்களின் சார்பாக வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சமாதானப்புறாக்களை பறக்க விட்டு, இருண்ட தேசம் வெளிக்க நாம் ஏந்திய தீப்பந்தத்திற்கு நம்பிக்கை நெய் ஊற்றி சிங்கள சகோதர மக்களினதும், அரசாங்கத்தினதும் உறவுக்குக் கரம் கொடுத்து தமிழ் மக்களின் உரிமைக் குரலாகவே நான் இவைகளை இந்த சபையில் முன்வைக்கின்றேன். •

# மனித உரிமை ஆணையாளர் பதவி நாடுகளுக்கு இடையில் முரண்பாடு

## தொடர்ந்து எதிர்க்கிறது கொழும்பு

(கொழும்பு)

மனித உரிமை ஆணையாளர் பதவியை உருவாக்கும் விடயத்தில் பொதுநலவாய நாடுகளின் இடையில் தொடர்ந்தும் கருத்து முரண்பாடுகள் நிலவி வருகின்றன.

மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மத்தியில் ஒருவகைப் பிளவு ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் பேர்த்தில் சந்திப்பை நடத்தினர். எனினும் அதில் இணக்கம் எதனையும் காண முடியவில்லை.

இந்த நிலையில் உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கும் இந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்மானம் எடுக்கமுடியாமல் போகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பு நாடுகளின் மத்தியில் மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக ஒரு ஆணையாளரை நியமிப்பது தொடர்பிலேயே இந்த முறுகல் நிலை தோன்றியது.

இந்த யோசனையை கனடா, அவுஸ்ரேலியா உட்பட்ட 11 நாடுகள் முன்வைத்தன. எனினும் இலங்கை, இந்தியா உட்பட்ட நாடுகள் இதனை எதிர்க்கின்றன.

இலங்கையை பொறுத்தவரை தற்போது சர்வதேசத்தின் முன்னால் தாம் காட்டிக் கொண்டிருக்கும் தமது நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு இந்த ஆணையாளர் நியமிப்பினால் பாதிப்பு ஏற்படும் என்று எண்ணுகிறது. அதனாலேயே இத்தீர்மானத்தினை நிராகரிக்கிறது.

இதேவேளை இந்தவிடயத்தில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் தீர்மானம் எடுக்காவிட்டால் அது மாநாட்டின் தோல்விக்கு சமன் என்று இந்திய உயர்நீதிமன்ற நீதியரசர் அஜித் பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

# கொரிய மொழிப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தன

(கொழும்பு)

கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பரீட்சைக்கு தோற்றியவர்கள் நான்கு இணையத் தளங்களூடாக பெறுபேறுகளை பார்வையிட முடியுமென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கிறது.

இதனடிப்படையில் www.slbfe.lk, www.eps top lk.org.kr, www.hrdkorea.org.kr மற்றும் www.eps.go.kr ஆகிய இணையத் தளங்களூடாக பரீட்சைப் பெறுபேறுகளை அறிந்துகொள்ள முடியு மென தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்கு 44 ஆயிரத்து 214 பேர் தோற்றினர். இந்தப் பரீட்சையில் ஒன்பதாயிரத்து 300 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் 2012 ஆம் ஆண்டில் கொரிய தொழில் வாய்ப்புகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவிக்கிறது.

# கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களை இந்திய அரசாங்கம் நாடு கடத்தியதா?

## காலம் கடந்து கசிகிறது தகவல்

(கொழும்பு)

தமிழகத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருநத புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சிரஞ்சீவி மாஸ்ரர் என்பவர் உட்பட மேலும் சிலர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனரா என்ற பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மானுக்கு மிக நெருங்கியவரும் மற்றும் 2ஆம் நிலை வகிக்கக்கூடியவர் என சந்தேகிக்கப்படும் சிரஞ்சீவி மாஸ்டரை தமிழக கியூப் பிரிவு பொலிசார் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் கைதுசெய்தனர்.

அதன் பின்னர் அவர் சிறையில் இருந்தவாறே ஜுனியர் விகடனுக்கு ஒரு செவ்வியையும் வழங்கியிருந்தார். இதன் மூலம் தமிழகத்தில் அவர் கைதானது உறுதி செய்யப்பட்டது. ஆனால் அவர் தற்போது தமிழகத்தில் இல்லை.

மத்திய அரசின் அறிவுறுத்தலுக்கு இணங்க அவரை கியூப் பிரிவுப் பொலிஸார் "றோ" உதவியுடன் இலங்கையிடம் கையளித்துவிட்டதாக செய்திகள் கசிந்துள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்ற வேளைகளில் சிரஞ்சீவி மாஸ்டர் வன்னியில் இருந்தார். அவர் பின்னர் அங்கிருந்து தமிழகத்தில் வந்து தங்கியிருந்தார். இதனை எப்படியோ மோப்பம் பிடித்த கியூப பிரிவு பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

பின்னர் அவரிடம் றோ அதிகாரிகள் பல கட்ட விசாரணைகளை நடத்திவந்தனர். குறிப்பாக பொட்டம்மான் குறித்த விடையங்களை அவர்கள் சிரஞ்சீவி மாஸ்டரிடம் துருவித் துருவிக் கேட்டதாகவும் தகவல்கள் அப்போது வெளியாகியிருந்தது.

இருப்பினும் அவர் தமிழகத்தில் சிறையில் இருக்கிறார் என்பதனை எல்லோரும் நம்பியிருந்தனர். சுமார் 3 மாதங்களுக்கு முன்னர் அவரை இந்தியா இலங்கையிடன் கையளித்துள்ளதாக தற்போது கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஊடகங்கள் மீது தாக்குதல் துமிந்தவின் நண்பர் வாக்குமூலம்

(கொழும்பு)

சியத்த மற்றும் வெற்றி ஊடக நிறுவனங்கள் மீது 2010 ஆம் ஆண்டு ஜுலை மாதம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தானே முன்னின்று நடத்தியதாக தெமட்டகொட சமிந்த என்றழைக்கப்படும் பாதாள உலகக் குழுவின் பிரதான நபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கொலன்னாவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெமட்டகொட சமிந்தவை கைது செய்தனர். அவர் அளித்த வாக்குமூலத்தில் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

தெமட்டகொட சமிந்த என்ற நபர் துமிந்த சில்வாவுக்கு மிக நெருக்கமானவராவார். பாரத லக்ஸ்மன் கொலை செய்யப்பட்ட பிறகு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடத்த ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

சகல அரச ஊழியர்களையும் இணைத்து வரலாற்றில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர், கொழும்பில் நடத்த உள்ளதாக அரச ஊழியர் தொழிற்சங்க மகா சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி சம்மேளனத்தின் பிரதிநிதிகள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் தினம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்க உள்ளனர் என அதன் பொதுச் செயலாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்த கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமைக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது. அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக அரசாங்கம் அளித்திருந்த உறுதிமொழி தொடர்பில், தமது சம்மேளனம் முன்வைத்துள்ள யோசனைகள் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் ரத்னபிரிய கூறியுள்ளார்.

கொழும்பு பொல்லையில் அமைந்துள்ள சுகாதார அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# மின்சாரம் தாக்கி பெண் மரணம்

(கொழும்பு)

வரக்காபொல, ஹுனுவல பிரதேச வீடொன்றில் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். நீரைக் கொதிக்க வைக்கும் மின் உபகரணம் மூலம் நீரைக் கொதிக்க வைக்க முற்பட்டபோதே அந்தப் பெண் இந்த அனர்த்தத்திற்கு இலக்காகியுள்ளார். சம்பவம் தொடர்பாக வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


# மரை வேட்டையாடிய இருவர் சிக்கினர்

(கொழும்பு)

இறால்மடுவ பிரதேசத்தில் சுமார் 40 கிலோ கிராம் மரை இறைச்சியுடன் இரு சந்தேகநபர்கள் புத்தளம் காட்டு லாகா திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் வில்பத்து சரணாலயப் பகுதியில் நீண்ட நாட்களாக வேட்டைக்குச் செல்பவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்ட இவர்கள், புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் வழி காட்டுதலில் தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்புச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பனை அபிவிருத்திச் சபை மற்றும் வடகடல் நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்திலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கண்காட்சிக் கூடத்தில் சில்ப 2011 கண்காட்சியும், விற்பனையும் நேற்றுமுன்தினம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, பசில் ராஜபக்ஷ ஆகியோர் கண்காட்சியைப் பார்வையிடுவ தையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் காணலாம்.



சாகவேண்டும் என்று யாரும் விரும்புவதில்லை. சொர்க்கத்திற்குச் செல்லப் போகிறோம் என்று நினைப்பவர்கள்கூட அங்கு விரைவில் செல்லவேண்டும் என்று விரும்புவதில்லை. இருப்பினும், மரணம் என்பது நம் அனைவருக்கும்




## சொர்க்கம், வாழ்விலும் சிறியது!

பொதுவான ஒரு முடிவு. யாரும் அதிலிருந்து தப்ப முடியாது. அது அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனெனில் மரணம் என்பது மனித வாழ்வின் ஒரு மகத்தான நிகழ்வு. மனித வாழ்வில் மாற்றத்தின் காரணி அதுதான். பழையதைக் களைந்து புதியனவற்றுக்கு வழிவகுப்பது அது. இன்றைய அளவில் நீங்கள் புதியவர்கள். ஆனால் சில காலங்களில் நீங்கள் மெல்ல மெல்ல பழையவர்களாகி களையப்படுவீர்கள். இப்படி வெடுக்கென்று சொல்வதற்கு மன்னிக்கவும், ஆனால் உண்மை இதுதான்.

உங்களுக்கான நேரம் குறைவு. ஆகையால், மற்றொருவரின் வாழ்க்கையை வாழ்வதில் அதை வீணடிக்காதீர்கள். வகுக்கப்பட்ட விதிகள் என்பன மற்றவர்களின் சிந்தனைகளில் விளைந்தவை அவற்றில் சிக்கிக் கொள்ளாதீர்கள். மற்றவர்களின் கருத்துக்கள் என்ற இரைச்சலில் உங்கள் உள்மனக் குரலைத் தொலைத்து விடாதீர்கள். முக்கியமாக, உங்கள் மனம் சொல்லும் பாதையைத் தொடரவும், உங்கள் உள்ளுணர்வை நம்பும் தைரியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மனமும் உள்ளுணர்வும் நீங்கள் உண்மையில் என்னவாக விரும்புகிறீர்கள் என்பதை அறியும். மற்றவை எதுவும் முக்கியமில்லை.

*ஸ்டீவ் ஜொப்ஸ்,*
*2005, மாணவர்களுக்கு ஆற்றிய உரையில்.*

## வாசிக்கநேரு?ம் தருணம்




இன்றைய நாளிதழ் செய்தியில்
நேற்று இறந்து இருந்தான்

இன்று அதிகாலை வரை
உயிரோடு இருந்தவன்
வாசிக்க தொடங்கிய கணத்திலிருந்து
சிறிது சிறிதாக
இறக்க தொடங்கியிருந்தான்

அன்றைய நாளிதழ்களை
அன்றைக்கே வாசிக்க
இயலாதவர்களுக்காக
இறந்தவன் மீண்டும் உயிர்த்தெழுகிறான்.

பின்னொரு நாளில்
அவர்கள் அச்செய்தியை
வாசிக்கநேரும் தருணம்
மீண்டும் அவன்
இறக்க வேண்டியிருந்தது.

*- ரவிஉதயன்*



## நாகேஷ்


நெஞ்சில் ஓர் ஆலயம் படம் ஆரம்பிச்சப்ப ஏற்கெனவே வாய்ப்பு கேட்டுப் போயிருந்த நாகேஷை வரச்சொன்னேன். குழந்தையைக் காணாமல்கம் பவுண்டர் தேடுற காட்சிக்கு ஒத்திகை பார்த்தோம்.

அந்த கேரக்டரில் நடிக்க வேண்டிய ராமாராவ் வரவில்லை. அதனால், நாகேஷை நடிக்க வெச்சோம். படுக்கைக்குக் கீழே குனிந்து குழந்தையைத் தேடுவதுதான் காட்சி. ஆனால், நாகேஷ் என்ன செய்தார் தெரியுமா? பெட்டில் கிடந்த தலையணையைத் தூக்கிப் பார்த்தார்.

பெட்டுக்கு அருகே இருந்த டிராயரைத் திறந்து பார்த்தார். குழந்தையைக் குழந்தைத்தனமாகவே அவர் தேடிய காட்சி ஸ்பாட்டில் எல்லாரையும் சிரிக்கவைத்துவிட்டது. கல்யாண்குமார் அழைத்தவுடன் வேகமாக படிக்கட்டில் நாகேஷ் இறங்கி வர வேண்டும். நடிப்பு தத்ரூபமாக வருவதற்காக படிக்கட்டில் விழுந்து புரண்டு ஓடினார். என் சம்மதம் இல்லாமல் கேரக்டர்கள் எதையும் செய்ய அனுமதிக்க மாட்டேன். ஆனால், நாகேஷுக்கு மட்டும் நான் எல்லா சுதந்திரத்தையும் கொடுத்தேன். காரணம், நான் நாகேஷின் ரசிகன்!

*- இயக்குனர் ஸ்ரீதர்*

## இலக்கிய உலகை விரிவுபடுத்த



பெண்களுக்குத் தனியான ஒரு உலகம் இருக்கிறது என்று நான் நம்பு கிறேன். அவர்களுடைய அனுபவம் என்னுடையது அல்ல. அந்த அனுப வத்தை என்னாலும் சுவீகரிக்க முடியுமானால் இன்னும் கொஞ்சம் மேன்மைப்பட்ட கவிஞனாக இருக்க முடியும் என்று நினைக்கிறேன். பெண களின் அனுபவம் எழுத்தில் வரணும். எழுத்தில் எதற்கும் விலக்கோ தடையோ இருப்பதாக எனக்கு அபிப்பிராயம் இல்லை. எழுத்தில் எல்லா மும் சாத்தியம். பெண்ணுடைய உலகமும் அதில் இடம்பெற வேண்டும் என்று நினைக்கிறேன்.

பெண்ணுடைய உலகம், உணர்வு, வரலாறு எல்லாவற்றையும் அவர்களுடைய மொழியில் பதிவுசெய்வதற்கான எல்லா உரிமையும் அவர்களுக்கு உண்டு. அதை எந்த வகையிலும் மறுக்க முடியாது. அதை ஏற்றாகணும். அப்போதுதான் இலக்கிய வாசகன் அல்லது இலக்கியவாதி என்னும் முறையில் உங்களுடைய உலகத்தை விரிவுபடுத்த அது உதவும்.

தமிழில் பெரிய வெள்ளமாக வந்திருக்கிறது. இது ஒரு ஆற்றொழுக்கான ஓட்டமாக மாறுவதற்கு இன்னும் கொஞ்சம் காலமாகும். இதற்குள் சரியும் சரியில்லாததும் தேவையும் தேவையில்லாததுமான பலபோக்கு கள் இந்த ஓட்டத்தில் இருக்கின்றன. இதில் பிரதானமாக எனக்குத் தோன்றுவது பெண்கள் உடலை மையப்படுத்திக் கவிதை எழுதுபவர்கள் என்று சொல்லப்படும் ஒரு குற்றச்சாட்டு. அது சரியானதாக எனக்குப் படலை. பெண் உடலைப் பற்றிப் பெண்தான் எழுத முடியும் என்று நான் நினைக்கிறேன். கமலாதாஸ் ஒரு கவிதையில் கர்ப்பத்திலிருந்து குழந்தை இறங்கின ஒரு வலியைச் சொல்லியிருப்பாங்க. இந்த வரியைச் சுகுமாரனோ பெருமாள் முருகனோ உணர்ந்து எழுத முடியாது. ஊகித்துத்தான் எழுத முடியும். அப்படியான உண்மையான இயல்புகள் கவிதைக்கு வருவது என்பது நம் கவிதையை இன்னொரு கட்டத்துக்குக் கொண்டு போவதற்கும் நம்ம கவிதையை மேன்மைப் படுத்துவதற்கும் உதவும் என்று நினைக்கிறேன். அதனால் அதைப் பற்றிய குறைகள் எனக்கு இல்லை. ஆகவே அந்தக் குற்றச் சாட்டுகளை நான் பொருட்படுத்த விரும்பவில்லை.


ஆனால், இதில் நான் பார்க்கக் கூடிய குறை என்பது கவிதை மொழி சார்ந்தது. இதுவரைக்கும் ஆண்கள் பயன்படுத்திக் கொண்டிருந்த மொழியைத்தான் பெண்களும் பயன்படுத்துகிறார்கள். பெண்களுடைய மொழியாக இதை மாற்றுவதற்குப் பெரிய முயற்சி எதுவும் இல்லை. ரொம்பக் குறைவான முயற்சிதான் நடந்திருக்கு.

இதில் மாற்றுக் கருத்துக்கும் இடம் உண்டு. அப்படியான முயற்சியைத் தொடங்கிவைத்தவர் சுகந்தி சுப்பிரமணியன் என்பது என் அபிப்பிராயம். அதற்குப் பின்னால் பெரிய இடைவெளி விட்டு இன்றைக்கு சல்மாவிடம் அப்படி ஒரு மொழி செயல்படுது என நான் ஊகிக்கிறேன். மாலதி மைத்ரி, சுகிர்தராணியிடம் அப்படியான மொழி செயற்படுகிறது. பெண்ணுடைய உலகத்தின் ஒரு மென்மையான மொழி உமா மகேஸ்வரியிடம் செயற்படுகிறது. இதையெல்லாம் நான் பார்க்கிறேன்.

ஆனால் இவர்களுடைய மொழியாக, சுயம்புவாக முழுவதும் பெண் உலகம் சார்ந்த, பெண் உணர்வு சார்ந்த மொழியாக இது இல்லை. அடுத்து, இவர்கள் எல்லாருமே பெண் உடல், உறுப்பு ஆகிய இரண்டு நிலைகளில் இருந்துதான் இந்தக் கவிதைகளை எழுதுகிறார்கள். பெண்கள் இந்தச் சமூகத்தினுடைய ஒரு பகுதி, இந்தப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதி என்று சொல்லப்படுமானால் பெண்ணுககும் வரலாற்றில் இடம் உண்டு, பண்பாட்டில் இடம் உண்டு, மதத்தில் இடம் உண்டு, மொழியில் இடம் உண்டு, இலக்கியத்தில் இடம் உண்டு. இத்தனை இடங்களிலும் இவர்கள் யாருமே பிரவேசிக்கவில்லை.

*- சுகுமாரன்*

# திமிங்கிலப் போர்



உலகின் கடல்களில் பல வகைத் திமிங்கிலங்களின் எண்ணிக்கை குறைந்து வரு[illegible]றது. ஆனாலும் பல நாடுகளின் எதிர்ப்பையும் மீறி இந்த ஆண்டும் திமிங்கிலங்களைப் பிடிக்க கப்பல்களை அனுப்பப் போவதாக ஜப்பான் சில நாட்களுக்கு முன் அறிவித்தது.. திமிங்கில வேட்டையாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க பல கப்பல்கள் உடன் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் இத் திமிங்கில வேட்டையை முறியடிக்க எங்கள் கப்பல்கள் தயார் என்று கடல் மேய்ப்பர் என்னும் இயக்கத்தினர் பதிலுக்கு அறிவிப்பு வெளியிட்டுள்ளனர். ஆக, வருகிற டிசம்பரில் அண்டார்டிக் கண்டத்தை ஒட்டிய கடல்களில் இரு தரப்பினருக்கும் மோதல் நிச்சயம். இந்த மோதல் புதியதல்ல. கடந்த சில ஆண்டுகளாகவே நடந்து வருவதாகும்.

அண்டார்டிக்கை யொட்டியுள்ள கடல்களில் இயற்கையில் நிறைய இரை கிடைப்பதால் அப் பகுதியானது திமிங்கிலங்களின் தாயகம் போல உள்ளது. இங்கு யாரும் திமிங்கில வேட்டையில் ஈடுபடலாகாது என்று சர்வதேச திமிங்கில ஆணைக்குழு தடை விதித்துள்ளது. அத்துடன் வர்த்தக ரீதியில் உலக அளவில் எந்த நாடும் திமிங்கில வேட்டையில் ஈடுபடலாகாது என்ற தடை 14 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது.

ஆனால் ஆராய்ச்சி நோக்கில் திமிங்கிலங்களைப் பிடிக்கலாம் என 1951 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஒரு 'ரத்து உள்ளது. இந்த ஓட்டையை ஜப்பான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு திமிங்கிலங்களைப் பிடிக்க ஆண்டுதோறும் அண்டார்டிக் கடல் பகுதிக்குக் கப்பல்களை அனுப்பி வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் "ஆராய்ச்சி" என்ற பெயரில் ஜப்பான் 1000 திமிங்கிலங்களைப் பிடித்ததாகக் கூறப்படுகிறது.

திமிங்கிலங்களைத் தாங்கள் வேட்டையாடுவதற்கு ஜப்பான் காரணம் கூறுகிறது. தங்களது உணவில் எப்போதுமே 50 சதவிகித அளவுக்கு திமிங்கில இறைச்சி இடம்பெற்று வருவதாக அது கூறுகிறது. ஜப்பானில் பாடசாலைகளின் மதிய உணவிலும் திமிங்கில இறைச்சி இடம்பெற்றுள்ளது. இன ரீதியில் தங்களுக்கு எதிராக இந்த· இயக்கம் நடத்தப்படுவதாகவும் அது குற்றம் சாட்டுகிறது.

ஜப்பான் தங்கள் நாட்டுக்கு அருகில் தங்களது ஆதிபத்தியத்துக்கு உட்பட்ட கடலில் திமிங்கில வேட்டை நடத்தினால் பெரிய எதிர்ப்பு இருக்கப் போவதில்லை. ஆனால் அவர்கள் பல ஆயிரம் கிலோ மீற்றருக்கு அப்பால் திமிங்கிலங்களின் தாயகமாக உள்ள பகுதிக்குப் போய் வேட்டை நடத்துவதால் தான் பிரச்சினை. இக் கடல் பகுதிக்கு ஜப்பான் வந்து திமிஙகில வேட்டை நடத்துவது அண்டார்டிகா அருகே உள்ள நியூசிலாந்து, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளுக்கும் பிடிக்கவில்லைதான். ஆனால் அவை ஜப்பானுடன் நேரடியாக மோத விரும்பவில்லை.

"ஆராய்ச்சி" என்ற போர்வையில் திமிங்கில வேட்டை கூடாது என்று 89 நாடுகள் அங்கம் வகிக்கும் சர்வதேச திமிங்கில ஆணைக்குழு கூட்டத்தில் தீர்மானம் போட்டால் ஜப்பானை வழிக்குக் கொண்டு வர முடியும். ஜப்பான் போலவே அடம் பிடிக்கும் நோர்வே நாட்டையும் அது கட்டுப்படுத்துவதாக இருக்கும். ஆனால் பல உறுப்பு நாடுகளுக்கு ஜப்பான் பணம் கொடுத்து அவற்றின் ஓட்டுகளை விலைக்கு வாங்கி வருவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. எது எப்படியோ உலகில் திமிங்கில வேட்டை நீடித்து வருகிறது.

# அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்ள பிரதமர் மன்மோகன் சிங் தயங்கினார்

## கொண்டலிசா ரைஸ்

(சென்னை)

அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு, பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் தயங்கினார். ஆனாலும், அப்போது இந்திய வெளியுறவு அமைச்சராக இருந்த நட்வர் சிங், ஒப்பந்தம் நிறைவேற வேண்டும் என்பதில், பிடிவாதமாக இருந்தார் என, அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கெண்டலிசா ரைஸ் கூறியுள்ளார்.

கெண்டலிசா ரைஸ், தற்போது நோ ஹையர் ஹானர் என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இந்தப் புத்தகம், இன்னும் சில நாட்களில் வெளிவரவுள்ளது. இதில, அவர் எழுதியுள்ளதாவது,

அமெரிக்காவுக்கு வந்திருந்த இந்திய பிரதமர் மன்மோகன் சிங், வெள்ளை மாளிகையில் அதிபர் புஷ்சை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிபரை சந்திப்பதற்கு முன், இரு நாடுகளுக்கும் இடையேயான அணுசக்தி ஒப்பந்தத்துக்கு, அவரிடம் ஒப்புதல் பெற்று விட வேண்டும் என்பதில், மிகவும் உறுதியாக இருந்தோம்.

ஒப்பந்தம் கையெழுத்தானால், அது இந்தியாவில் பிரச்சினையை ஏற்படுத்தும் எனக் கருதிய மன்மோகன் சிங், இதற்கு ஒப்புதல் அளிக்க, மிகவும் தயங்கினார். ஆனாலும், அப்போது இந்திய வெளியுறவு அமைச்சராக இருந்த நட்வர் சிங், இந்த ஒப்பந்தம் நிறைவேற வேண் டும் என்பதில், பிடிவாத மாக இருந்தார்.





இந்த விவகாரத்தை பிரதமரிடம் பேசுவதாக நட வர் சிங், எங்களிடம் உறுதி யளித்தார். ஆனாலும், நட் வர் சிங் இதுகுறித்து விளக்கியும், அதற்கு உடன்பட மன்மோகன் சிங் மறுத்து விட்டார். உடனடியாக, அதிபர் புஷ்சுக்கு இதுகுறித்து தகவல் தெரிவித்தேன். ஒப்பந்தம் நிறைவேற வாய்ப்பு இல்லை என, அவரிடம் கூறினேன். இதற்கு பதிலளித்த புஷ், இது நல்ல செய்தி அல்ல என, இறுக்கமான முகத்துடன் கூறினார்.

அடுத்த நாள், மன்மோகன் சிங் புஷ் இடையேயான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல் நாள் இரவில் இருந்தே, எனக்கு சரியாக தூக்கம் வரவில்லை அதிகாலையிலேயே எழுந்து விட்டேன். மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து, எப்படியாவது சம்மதம் பெற்று விட முடிவு செய்தேன். ஆனால், மன்மோகன் சிங் என்னை சந்திப்பதை தவிர்த்தார். இதைத் தொடர்ந்து, நட்வர் சிங் என்னை போனில் அழைத்தார்.

உங்கள் பிரதமர் என்னை சந்திப்பதை ஏன் தவிர்க்கிறார் என, அவரிடம் கேட்டேன். அதற்கு அவர், ஒப்பந்தம் நிறைவேற வாய்ப்பு இல்லை என, உங்களிடம் நேரில் கூறுவதற்கு அவர் விரும்பவில்லை. அதனால் தான், சந்திப்பை தவிர்க்கிறார் என்றார்.

## குறிக்கோளிலிருந்து அன்னா ஹசாரே விலகிச் செல்வதாக குற்றச்சாட்டு

(ஜெய்ப்பூர்)

காந்தியவாதி அன்னா ஹசாரே, தற்போதைய நிலையில் தன் குறிக்கோளிலிருநது விலகிச் சென்று கொண்டிருப்பதாக அவரது குழுவில் இருந்து சமீபத்தில் விலகிய ராஜிந்தர் சிங் தெரிவித்துள்ளார்.

வலுவான ஜன் லோக்பால் மசோதாவை வலியுறுத்தி உருவான காந்தியவாதி அன்னா ஹசாரே குழுவில், அரசியலவாதிகளிடையே காணப்படும் வேற்றுமைகளை விட அதிகளவில் வேற்றுமைகள் உள்ளது. ஹரியானா மாநிலத்தில், ஹிசார் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், ஊழலில் ஊறிய வேட்பாளரை ஆதரித்து வெற்றிபெறச் செய்ததன் மூலம் ஹசாரே தன் நிலையில் இருந்து விலகி விட்டார்.

அதேபோல், அன்னா குழுவில் இடம் பெற்றுள்ள அர்விந்த் கெஜ்ரிவால் மற்றும் கிரண் பேடிவின் செயல்பாடுகள் மூர்க்கத்தனமாக உள்ளது என்று அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது, ஹிசார் தொகுதி இடைத்தேர்தல் வேட்பாளரை ஹசாரே ஆதரிக்க முடிவு செய்த நேரத்தல், நான் அப்போது கென்யாவில் இருந்தேன். அந்தநேரத்தில், நான் இங்கு இருந்திருந்தால் ஹசாரேவை தடுத்திருப்பேன்

ஊழல் ஒழிப்பிற்காக தொடங்கிய ஹசாரே ஆரம்பித்த குழு, ஊழலில் திளைத்துவரும் வேட்பாளரை ஆதரித்தது மிகுந்த வருததமளிக்கிறது.

## தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் 16 ஆயிரத்து 561 பேர் தற்கொலை

(சென்னை)

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 16561 பேர் தற்கொலை செய்கின்றனர். இந்தியாவில் 1 மணிநேரத்துக்கு 15 பேர் பலியாகின்றனர். இந்தியா முழுவதிலும் நடைபெற்றுள்ள குற்றச்சம்பவங்கள், விபத்துகள் பற்றிய தகவல்கள் தேசிய குற்ற ஆவண காப்பகம் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் நடைபெற்ற குற்றச் சம்பவங்கள் பற்றிய பட்டியல் டில்லியில் வெளியிடப்பட்டது. உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இதனை வெளியிட்டார்.

அதில் இடம் பெற்றுள்ள விவரங்கள் வருமாறு:-

கடந்த ஆண்டு இந்தியா முழுவதும் 1 இலட்சத்து 35 ஆயிரத்து 599 பேர் தற்கொலை செய்துள்ளனர். நாட்டில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் அதிகம் பேர் தற்கொலையால் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். கடந்த ஆண்டு தமிழ்நாட்டில், 16 ஆயிரத்து 561 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 424 பேர் தற்கொலை செய்திருந்தனர். இதனுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டைவிட 14.8 சதவீதம் பேர் அதிகம் தற்கொலை செய்துள்ளனர்.

## தூக்குத் தண்டனைக் கைதிகளின் வழக்கு நவம்பர் 29 இற்கு ஒத்திவைப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை கைதியின் மரண தண்டனையை நீக்க தொடரப்பட்ட வழக்கு நேற்று சென்னை உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசா ரித்த நீதிபதி நவம்பர் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இந்த வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதை மேன் முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது. மரண தண்டனையை ரத்து செய்யக் கோரி ஜனாதிபதியிடம் முருகன் உட்பட 3 பேரும் 2000 ஆம் ஆண்டில் கருணை மனு வழங்கினர்.

இந்தக் கருணை மனு 2011 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது. இதையடுத்து சென்னை உயர் நீதிமன்றில் 3 பேரும் தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்தனர். அதில் 11 ஆண்டுகள் காலதாமதமாக கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

நாங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறோம். ஆயுள் தண்டனையையும் தாண்டி சிறையில் இருப்பதால் எங்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று கூறியிருந்தனர். இந்த மனுவை கடந்த செப்ரெம்பர் மாதம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் சி.நாகப்பன், எம்.சத்யநாராயணன் ஆகியோர் விசாரித்தனர்.

3 பேருக்கும் மரண தண்டனையை நிறைவேற்ற இடைக்கால தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் இவர்களது மனுக்களுக்கு பதிலளிக்கும்படி மத்திய, மாநில அரசுகளுக்கு கடிதம் அனுப்ப உத்தரவிட்டனர்.

இந்நிலையில் மத்திய அரசு சார்பில் உயர்நீதிமன்றத்தில் பதில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது, அம்மனுவில் அதில் மூன்று பேரின் கருணை மனுவை ஜனாதிபதி ஏற்கனவே நிராகரித்து விட்டார். கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின் துாக்கில் போடுவதுதான் சரியான நடைமுறை.

ஆகவே இவர்களின் தூக்கு தண்டணையை உடனே நிறைவேற்ற வேண்டும் என கூறியிருந்தனர். மேன்முறையீட்டு நீதிமன்றில் இவ் வழக்கு நிலுவையில் இருப்பதால் வழக்கை ஒத்தி வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

வழக்கறிஞரகளின் கோரிக்கையை ஏற்று இவ் வழக்கை நவம்பர் 29 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

## தமிழகத்தில் தொடரும் மழை 10 மாவட்டங்கள் கடும் பாதிப்பு



(சென்னை )

தமிழகத்தில் கடந்த இரு நாட்களாக பெய்த அடைமழைக்கு 10 மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

இன்னும் இரண்டு நாட்களுக்கு தமிழகம் புதுச்சேரியில் கன மழை அல்லது மிக கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதற்கு அறிகுறியாக, வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தம் உருவானது.

மன்னார் வளைகுடா மற்றும் ஆந்திர கடலோரம் வரை அது நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.

## ரத யாத்திரை பாதையில் வெடிகுண்டு பயணப் பாதையை மாற்றினார் அத்வானி

(மதுரை)

தமிழகத்தில் 2 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி, அவரின் ரதயாத்திரை செல்லும் பாதையில்,. பைப் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து அவரது ரதயாத்திரை செல்லும் பயணப் பாதை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருமங்கலம் ஆலம்பட்டி வழியாக அவர் விருதுநகருக்கு செல்லா மல், திருமங்கலத்திற்கு முன் உள்ள நான்குவழிச்சாலை வழியாக அவர் விருதுநகருக்கு சென்றார்.

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்கவும், நாட்டில் அமைதி நிலவும் பொருட்டு, பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி ஜன் சேத்னா யாத்திரையை, சமபத்தில் பீகாரில் இருந்து ஆரம்பிததார்.

ரதயாத்திரை பல்வேறு மாநிலங்களை கடந்து தற்போது தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது. ரதயாத்திரையின் இரண்டாம் கட்டப் பயணத்தை, அவர் மதுரையில் இருந்து அரம்பித்தார்.

இந்நிலையில், அவரின் ரதயாத்திரை செல்லும் பாதையில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திருமங்கலத்தை அடுத்த ஆலம்பட்டியில் உள்ள ஓடு பாலம் ஒன்றில் வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் தந்த தகவலையடுத்து அங்கு பொலீஸ் உயர்அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்தனர்.

விசாரணையின் முடிவில், 6 அடி நீளமுள்ள ஓடுபாலத்தின் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6 அடி நீள பைப் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வெடிகுண்டை இயக்கும் பொருட்டு, 25 மீ. நீளமுள்ள வயர் , அருகில் இருந்த பனைமரத்தின் அடியில் பொருத்தப்பட்டிருந்தது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலீஸ் டி.எஸ்.பி. ரவீந்திரன், தாசில்தார் மோகன் உள்ளிட்டோர், வெடிகுண்டை செயலிழக்க வைத்தனர்.

# தாய்லாந்தில் தொடருகின்ற மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ள பாங்கொக்



(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் பெய்து வரும் தொடர் மழையில் இதுவரை 350க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். பாங்கொக் நகரில் 5 அடி உயரத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி உள்ளனர். தாய்லாந்து நாட்டில் கடந்த 20 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, பாங்கொக் நகரம் வழியாகச் செல்லும் சோ பரையா என்ற ஆறு உடைந்து நகருக்குள் புகுந்துள்ளது. இதனால் பாங்கொக் நகர் முழுவதும் 5 அடிக்கு வெள்ளம் சூழ்ந்துள்ளது. பாங்கொக்கின் விமான நிலையமான டான்மவுங் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுவிட்டன.

கடந்த 50 ஆண்டுகளில் இதுபோன்ற வெள்ளம் பாங்கொக் நகரில் ஏற்பட்டது இல்லை. இந்த வெள்ளத்தில் இதுவரை 350 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 9.7 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து உள்ளனர். சுமார் 10,000 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதுகுறித்து தாய்லாந்து பிரதமர் தெரிவிக்கையில், வெள்ளத்தை தடுக்கும் முயற்சியில் தொடர்நது ஈடுபட்டு வருகிறோம். ஆனால் பாங்கொக் நகரைச் சுற்றி மிக அதிகளவிலான வெள்ளம் சூழ்ந்துள்ள்தால், அதை கட்டுப்படுத்த முடியவில்லை. நகரில் தாழ்வான பகுதிகளில் இருப்பவர்கள் உடனடியாக மேடான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து விடுங்கள் என எச்சரித்துள்ளார்.

வெள்ள நீர் காட்டுப் பகுதிகளிலும் புகுந்ததால் அங்கிருந்து ஆயிரக்கணக்கான பாம்புகள் பாங்கொக் நகருக்குள் அடித்து வரப்பட்டுள்ளன. இதனால் மக்கள் வெள்ளத்தில் செல்லவும் பயப்படுகின்றனர். தொடர் மழை மற்றும் வெள்ளம் காரணமாக தாய்லாந்தில் 5 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. கடநத 30 ஆண்டுகளில் பெய்துள்ள மழைப் பொழிவை விட, இந்தாண்டு 25 சதவீதம் அதிக மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## சவூதியில் தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றம்

(றியாத்)

சவூதி அரேபியாவில் ஒரு தம்பதியை வாகனத்தை ஏற்றிக் கொன்ற நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கற்பழிப்பு, கொலை, ஆயுதத்தை காட்டி கொள்ளையடித்தல், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்கு சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

மரண தண்டனை அளிக்கும் நடைமுறையை இரத்துச் செய்யும்படி ஐ.நா மனித உரிமை சபை பல ஆண்டுகளாக சவூதி அரேபியாவை வற்புறுத்தி வருகிறது.

இருப்பினும் இதை ஏற்க மறுத்து இஸ்லாமிய சட்டப்படி மரண தண்டனையை நிறைவேற்றி வருகிறது. முகமது அல் ஹார்பி என்ற நபர் சவூதியைச் சேர்ந்த தம்பதியை உள்நோக்கத்துடன் வாகனத்தை ஏற்றி கொலை செய்துள்ளார்.

இதற்காக அல் ஹார்பிக்கு சவூதி உள்துறை அமைச்சகம் நேற்றுமுன்தினம் தலையை துண்டித்து மரண தண்டனையை நிறைவேற்றியது.

# ஈராக் குண்டுத் தாக்குதலில் 18 பேர் உயிரிழப்பு

(பக்தாக்)



ஈராக்கின் தலை நகர் பக்தாத்தில் நடத்தப்பட்ட இரட்டைக் குண்டுத் தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் 36 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன. எந்தவொரு அமைப்பும் தாக்குதலுக்கு உரிமை கோராத நிலையில், அல்கைதா இயக்கத்தினர் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஈராக்கில் அண்மைக்காலமாக நடத்தப்பட்டுவரும் குண்டுத் தாக்குதல்களினால் ஏராளமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. இந்த வருடத்திர் இறுதிப்பகுதிக்குள், அமெரிக்கப் படையினர் முழுமையாக ஈராக்கை விட்டு வெளியேறவுள்ள நிலையில் தாக்குதல் நடத்தப்பட்டுவருகின்றன.

# சீன ஆதிக்கத்தை எதிர்த்து பௌத்த துறவி தற்கொலை

(பீஜிங்)

சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து திபெத்தைச் சேர்ந்த புத்த மதத் துறவி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இதுவரை 10 துறவிகள் இதுபோல் தற்கொலை செய்து கொண்டது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. திபெத்தை சீனா தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. சுதந்திரம் வேண்டி திபெத்தியர்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்தே தங்களுக்கு என தனி அரசை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் சீனாவின் பல நகரங்களில் திபெத்தை சேர்ந்த புத்த துறவிகள் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனர். இதனால் சீன அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இன்னொரு புத்த துறவி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திபெத்தியர்கள் நடத்தி வரும் அரசு செய்தித் தொடர்பாளர் கூறுகையில், கிழக்குத் திபெத்தில உள்ள கார்ஸ் பகுதியில் புத்த துறவி தவா செரிங் என்பவர், சீனாவின் ஆதிக்கத்தை கண்டித்து 25ஆம் திகதி தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

அவர் தீயில் எரியும் போது புத்த மதத் தலைவர் தலாய்லாமா திபெத் திரும்ப வேண்டும். சீன அரசை கண்டித்துப் போராட வேண்டும். சுதந்திர திபெத்தில் எல்லோருக்கும் சம உரிமை கிடைக்க வேண்டும் என்று கோஷமிட்டார் என்று தெரிவித்தார். இதுவரை 10 புத்த மதத் துறவிகள் தற்கொலை செய்து கொண்டது சீன அரசுக்கு சர்வதேச அளவில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

## லிபியாவில் இருந்து நேட்டோ வெளியேற்றம்

(திரிபோலி)

லிபியாவில் இருந்து நேட்டோ படைகள் வருகிற 31ஆம் திகதி நள்ளிரவு 11-59 மணிக்குள் லிபியாவில் இருந்து வெளியேற வேண்டும் என ஐ.நா.சபையின் பாதுகாப்பு கவுன்சில் உத்தரவிட்டுள்ளது. அதற்கான தீர்மானம் நேற்றுமுன்தினம் நிறைவேறியது.

லிபியாவில் ஜனாதிபதியாக இருந்த கடாபியின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்த மக்கள் இராணுவத்தால் சுட்டு கொல்லப்பட்டனர். அவர்களை எதிர்த்து மக்களின் புரட்சிப் படை எதிர்த்து போரிட்டது. இவர்களுக்கு ஆதரவாக சர்வதேச நேட்டோ படைகள் களமிறங்கின. கொன்று குவிக்கப்படும் மக்களை காப்பாற்றுவதற்காக இவர்களுக்கு ஐ.நா.சபை அனுமதி அளித்தது.

# துருக்கியில் பூகம்ப இடிபாட்டுக்குள்ளிருந்து 3 நாட்களின் பின்னர் இளம் பெண் மீட்பு



(அங்காரா)

துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி பரிதவித்த இளம் பெண் 3 நாட்களுக்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டார்.

துருக்கியின் வான் மாகாணத்தில் பயங்கரப் பூகம்பம் ஏற்பட்டு வீடுகள், கட்டடங்கள் இடிந்து நாசமாயின. அதில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 523 ஆக உயர்ந்துள்ளது. 1,652 பேர் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

கட்டடங்கள் பல இடிந்ததால் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிருக்கு போராடுபவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் 3 நாட்களாக கட்டட இடிபாடுக்குள் சிக்கி உயிருக்கு போராடிய கோஸ்டெ பஹர் (27) என்ற பெண்ணை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டனர்.

அந்தப் பெண்ணுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் அவரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடந்து வருவதாக உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

## குடும்பக் கட்டுப்பாட்டால் சாதனை படைத்தது சீனா

உலக சனத்தொகை 7 பில்லியன்களை எட்டுவதை தமது அரசாங் கத்தின் குடும்பக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மூலம் 5 வருடங்களுக்கு பிற்போடமுடிந்ததாக சீனா தெரிவித்துள்ளது. இல்லாவிடின் 5 வருடங்களுக்கு முன்னர் உலக சனத்தொகை 7 பில்லியன்களை கடந்திருக்கும் என்று சீனா குறிப்பிட்டுள்ளது. சீனாவில் சனத்தொகை அதிகரிப்பு கட்டுப்படுத்தப்படாவிடின், 2006 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை 7 பில்லியன்களை எட்டியிருக்கும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சீனாவில் 400 மில் லியன்களால் பிறப்பு வீதம் கட்டுப்படுத் தப்பட்டுள்ளதாகவும் ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளனர். உலகின் சனத்தொகை கூடிய சீனாவின் தற்போதைய சனத்தொகை ஒன்று தசம் 7 பில்லியன்கள் என தெரிவிக்கப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் சனத்தொகையினால் உலகம் பாரிய சவால்களை சந்திக்க நேர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# போர்க்குற்றச் சாட்டுக்கள் விலக்கிக் கொள்ளக்கூடாது

## ஹிலாரி கிளின்டனுக்கு மகஜர்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றங்களை விலகிக் கொள்ள வேண்டாம் எனக்கோரி, வடக்கு கிழக்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என்ற பெயரில், அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனிடம் இரகசிய மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளதென திவயின என்ற சிங்களப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஹிலாரி கிளின்டனுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் முன்னர், இந்த மகஜர் வழங்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளதாக புலனாய்வு பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து கவனம் செலுத்துவதில் பயனில்லை எனவும் தமிழ் மக்களுக்கு சுயாட்சியே தேவை எனவும் அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

# ஊழியர் சேமலாபநிதி ஆவணங்கள் திரட்ட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதிக்காக தற்போது பங்களிப்பு செலுத்தும் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களின் கை ரேகை அடையாளம் மற்றும் புகைப்படம் போன்ற ஆவணங்களைத் திரட்டுவதற்குரிய நடவடிக்கைகள் வடமாகாணத்தில் நவம்பர்,டிசம்பர் மாதங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கான இச் செயற்பாடு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இடம்பெற இருக்கின்றது என யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே கை அடையாளம் மற்றும் புகைப்படம் எடுத்தல் தொடர்பான பணி தொழில் திணைக்களத்தின் மேற்பார்வையில் நடைபெறவுள்ளது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை யாழ்.தொழில திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (எஸ்)

# மின்னலின் தாக்கம் இதுவரை 45 பேர் பலி

## விழிப்புடன் இருக்க கோரிக்கை

(கொழும்பு)

மின்னல் தாக்கத்தினால் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரையிலான காலப்பகுதியில் மட்டும் 45 பேர் பலியாகியுள்ளதுடன் கணிசமானோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று சென்றுள்ளதாக காலநிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கடும் மழையுடன் கூடிய இடிமின்னல் வேளைகளில் பொதுமக்கள் கூடுமானவரை திறந்த வெளிகளில் இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு மின் சாதனப் பொருட்களின் பயன்பாடு, தொலைபேசி உரையாடல் போன்றவற்றையும் தவிர்ப்பது சிறந்தது எனவும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, காலநிலை அவதான நிலையத்துக்கு கிடைத்த தரவுகளின்படி ஜனவரி மாதம் 02 பேரும், மார்ச் மாதம் 05 பேரும், ஏப்ரல் மாதம் 20 பேரும், மே மாதம் 07 பேரும், ஜூன் மாதம் 06 பேரும், ஓகஸ்ட் மாதம் 02 பேரும், செப்டெம்பர் மாதம் 02 பேரும், இம்மாதம் 08 பேரும் மின்னல் தாக்கத்தினால் பலியாகியுள்ளனர்.

இவ்வருடத்தில் ஏப்ரல் மாதத்திலேயே அதிகமானோர் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி பலியாகியுள்ளனர். பெப்ரவரி, ஜூலை ஆகிய மாதங்களில் மின்னல் தாக்கத்தினால் எவரும் பலியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இடி மின்னல் வேளைகளில் தொலைக்காட்சி பார்ப்பதையும் ஏனைய மின்பாவனை பொருட்களை பாவிப்பதையும் தவிர்ப்பது சிறந்தது. தொலைக்காட்சி பெட்டியின் அண்டனா வயரை கழட்டி வேறாக வைக்க வேண்டும். அதே போன்று வயர் வழியான தொலைபேசி உரையாடலையும் தவிர்க்க வேண்டும். கையடக்க தொலைபேசியில், கட்டடங்களுக்கு வெளியிலிருந்து பேசுவதையும் தவிர்த்தல் சிறந்தது.

வாகனங்களை பொறுத்தவரையில் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிளில் மற்றும் ட்ரெக்டர் (உழவு இயந்திரம்) போன்றவற்றை இயக்குவதையும் அச்சந்தர்ப்பத்தில் தவிர்க்க வேண்டும் என்றார் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அடிப்படை வசதி வேண்டும் மருத்துவர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் கடமையாற்றுமை மருத்துவ அதிகாரிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

கஷ்டப் பிரதேச அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளில் பிரச்சினைகள் நிலவுவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிடுகிறது.

சில பிரதேசங்களில் வைத்தியர்கள் அருந்துவதற்கு குடிநீரைக் கூடகொள்வனவு செய்ய நேரிட்டுள்ளதாக சங்கத்தின் உப செயலாளர் டொக்டர் உபுல் குணசேகர தெரிவிக்கிறார்.

எதிர்காலத்தில் சுகாதார அமைச்சுடன் இணைந்து கஷ்டப் பிரதேச வைத்தியசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை ஆராய்வதற்கும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கும் எண்ணியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கஷ்டப் பிரதேச வைத்தியசாலை ஒன்றிற்கு வைத்தியர் ஒருவரை சேவையில் அமர்த்துவதாயின் அதற்கான அடிப்படை வசதிகள் வழங்கப்படுவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.குடாவை மிரட்டுகிறது டெங்கு

## பாதுகாப்பது எப்படி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு வைரஸ் நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்தியப் பகுதியினர் மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இது குறித்து மக்கள் விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும், செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

டெங்கு தொற்று என்பது என்ன?

இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய் இது இரு வகையாக வெளிப்படும்.

அ) டெங்கு காய்ச்சல் DENQUE FEVER

ஆ) இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சல் DENGUE HAEMORHAGIC FEVER

**டெங்கு காய்ச்சலின் குணங்குறிகள்**

அ) சடுதியாக ஏற்படும காய்ச்சல்,

ஆ) கடுமையான தலையிடி,

இ) கண்ணின் பிற்பகுதியில் நோ

ஈ)தசை,எலும்பு,மூட்டுக்கள் போன்றவற்றில் கடும் நோ

**இரத்தத் தாக்கத்தை உண்டாக்கும் டெங்குக் காய்ச்சலின் குணங்குறிகள்**

மேற்குறிப்பிட்ட குணங்குறிகளுடன் உறுப்புக் களில் இரத்தம் கசிதலும் அதிர்ச்சி நிலை ஏற்படும் நிலையிலும் சாதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டு 2-3 நாட்களில் காணப்படும் இந்த நிலை 5-6 நாட்கள் (103 பாகை - 105 பாகை) தொடரும் 3-4 நாட்களில் குறைந்து மீண்டும் வரக்கூடும். இந்த நிலையில் நோயாளிக்குப் பாவீனமான நிலை ஏற்பட்டு இயலாத்தன்மை ஏற்படும் இந்நோய் மக்களிடையே சடுதியாகப் பெருகிப் பலரைத் தாக்கும் சக்தி கொண்டது.

**கடுமையாக டெங்கு, இரத்தத் தாக்க நிலை அதிர்ச்சி நிலையை எவ்வாறு இனங்காண்பது**

மேற்குறிப்பிட்ட குணங்களுடன் கீழே தரப்படும் ஏதாவது 1முதல் 2வரையான குணங்குறிகள் இருப்பின் ஆபத்து நிலையாக கணிக்கலாம்.

1) கடுமையான தொடர்ச்சியான வயிற்று நோ அல்லது வலி 2) மூக்கு, வாய்,முரசு,தோலின் அடியில் குருதி ஒழுக்குக் காணப்படுதல் 3) அடிக்கடி குருதி கலந்தோ அல்லது இல்லாமலோ வாந்தி எடுத்தல் 4) மலம் கறுப்பு நிறமாக வெளியேறும் 5) நாவரட்சி மற்றும் தண்ணீர் தாகம் ஏற்படல் 6) வெளிறிய/குளிர்ந்த நிலையில் தோல் காணப்படல்.

**சிகிச்சை முறைகள்**

டெங்கு நோய் என்று கருதினால் ஒரு தகைமையுள்ள வைத்தியரைக் கொண்டு பரிசோதித்தல் அவசியம், ஆரம்பத்தில் சிகிச்சை மேற் கொண்டால் மட்டுமே சிக்கல் ஏற்படுவதையும், உயர் இழப்பையும் தவிர்க்கலாம், அஸ்பிரியன் (Aspirin), புறுபென் (Brufen), கொடுப்பதை தவிர்க்க வேண்டும். அவை நோயை சிக்கலாக் கும், பரசெற்றமோல் (Paracetamol) வைத்திய ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

கடுமையான வயிற்று நோவு, கறுப்பு நிறமாக மலம் வெளியேறுதல்,கடும் வியர்வை வெளியேறுதல்,மூக்கு, வாய், தோலுக்கு அடியில் இரத்தக் கசிவு காணப்படுதல், குளிர்ந்த தோல் என்பன நோயாளிக்கு உயிர் ஆபத்து ஏற்படுவதற்கான அளிகுறிகள், ஆகவே அவ் வேளையில் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும்.


**டெங்கு பற்றிய அடிப்படைத் தகவல்கள்**

1. Aedes வகை நுளம்பினால் இந்த நோய்த் தொற்று ஏற்படலாம்.

2. ஒரு நோயாளியை கடித்த நுளம்பு ஒரு சுகதேகியை கடித்தால் அவருக்கு 5-7 நாட்களில் நோயின் அறிகுறி தென்படும். எந்த நுளம்பு நோய்க்காவியாக இருந்தது என்பதை கண்டு பிடிக்க முடியாது. ஆகையால் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது முக்கியம்.

**நுளம்பு பெருகும் இடங்கள்**

நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கிநிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டி ருக்கும் வெற்றுப் போத்தல்கள், பாவனைக்குத வாத சட்டிகள் போன்றவற்றிலும், தண்ணீர் தொட்டிகளிலும்,மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் நுளம்பு பெருகும் தண்ணீரை



தேக்கி வைக்கும் கொள்கலன்கள் மூடப்படாமல் இருப்பின் அவை 07 நாட்களுக்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும். இல்லையேல் நுளம்பின் குடம்பிகள் உருவெடுத்து பெருகும்.

**அதனை தடுப்பதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

அ) வீட்டுச் சூழலிலுள்ள நீர் தேங்கும் நிலைகளை ஒழித்தல், ஆ) வீட்டிற்குள் வைக்கும் சாடிகள், கோப்பைகள் போன்றவற்றுள் நீர் நிலைத்து நிற்காமல் சுத்தப்படுத்தல், இ) தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் மற்றும் வாளிகளை மூடிவைத்தல், ஈ) பாவித்து எறிந்த போத்தல்கள் மற்றும் பாத்திரங்களை சுற்றுச் சூழலிருந்து அகற்றி அழித்தல்.

மேலே தெரிவிக்கப்பட்டிருந்த முறைகளை கவனத்தில் எடுத்து நாம் எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மை காப் பாற்றிக் கொள்ளலாம் Dr.R.தெய்வேந்திரம்

# மனித உரிமை மீறல்கள் குறித்து பொலிஸாருடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்றைய தினம் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் யாழ். மனித உரிமை ஆணைக்குழு கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வு இலங்கை மனித உரிமை ஆணையாளரும், முன்னாள் பொலிஸ்மா அதிபருமான ரி.இ.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்றது.

இங்கு கலந்துகொண்ட பொலிஸ் உயரதிகாரிகளுடன் இணைந்து ஆணையாளரால் பல விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. இதன் போது பொலிஸ் நிலையத்தில் தமிழ்மொழி அமுலாக்கம், காணாமல் போனோர் தொடர்பான விசாரணை, கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் கைதுகள் குறித்து ஆராயப்பட்டதுடன், பொலிஸாருக்கு மனித உரிமை குறித்து விழிப்பூட்டல் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

இதற்குப் பொலிஸ் அதிகாரிகள் சார்பில் தமிழ்மொழி மூலம் பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல், யாழ்ப்பாணத்தில் யுத்தத்தின் பின்னர் பெண், சிறுவர் உரிமை மீறப்படுதல், ஏனைய உரிமை மீறல் குறித்தும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திரன், யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் இணைப்பாளர் த.கனகராஜ், யாழ். கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (எப்.எஸ்)

## குடாநாட்டு...

வீடுகள் அமைத்துக் கொடுத்தல் தொடர்பாகவும், யாழ். குடாநாட்டில் யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களின் சுயதொழில் முயற்சிகள் மற்றும் சிறுபிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் பாரிய அளவில் அபிவிருத்தி நடைபெறுகின்ற போதிலும், பாடசாலைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும், வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான விடுதிகள் பற்றாக்குறை மற்றும் உபகரணங்களுக்கான தேவைகள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் 60 ஆயிரத்து 842 வீடுகள் தேவையாகவுள்ள நிலையில், உலகவங்கி 13 ஆயிரத்து 350 வீடுகள் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளதுடன், இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 7 ஆயிரத்து 400 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் 2 ஆயிரத்து 289 வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளன எனவும், மிகுதியான வீடுகளை அமைப்பதற்கு உதவிகள் தேவைப்படுவதாக அரச அதிபர் சுவிஸ் குழுவினரிடம் தெரிவித்தார். (எஸ்)

## அரசியல்....

அமெரிக்க இராஜாங்கத்துறை அதிகாரிகளுடன் சந்திப்புக்கள் நடத்தப்பட்டன. அத்துடன், மேலும் சில முக்கிய செனட்டர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கவுள்ளோம்.

இது வரை நடந்த சந்திப்புகளில், அமெரிக்க அதிகாரிகள், இலங்கையில் போருக்கு பின், நல்லிணக்கம் என்று அரசு வெளி உலகுக்குக் கூறினாலும், நடக்கும் நடப்புகள் அதற்கு நேர்மாறாக இருப்பதைப் பற்றி விவாதித்தாகத் தெரிவித்தார்.

மேலும் அரசியல் தீர்வுத் திட்டத்தைப் பொறுத்தவரை, இலங்கை அரசு சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறதா என்பது குறித்தும் விவாதித்ததாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அமெரிக்கா, இலங்கை அரசு மீது அரசியல் தீர்வு குறித்து அழுத்தங்களை தந்து கொண்டிருக்கிறது இலங்கை அரசு இதை சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறதா என்பதுதான் சரியாகத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

## வடபகுதி...

(Bottam Trauling) தங்கூசி வலை மீன்பிடி, டைனமைற் பாவித்து மீன் பிடித்தல் முதலியமை தற் சமயம் இலங்கைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கட்டுப்படுத்த கடற்தொழில் நீரியல்வள அமைச்சினால் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இக்கூட்டத்தில் யாழ். குடாக் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களது பாஸ் நடைமுறை மற்றும் படகு இயந்திர வலுப்பாவணை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## தீர்வுக்காக...

அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும்.

நாட்டின் ஜனநாயகத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. நாட்டின் சில பிரச்சினைகள் சர்வதேச விவகாரங்களாக மாற்றமடைந்துள்ளன.

சட்டம் ஒழுங்கை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் நாடாளுமன்றிற்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, இலங்கை என்ன செய்ய வேண்டுமென்ப தனை வலியுறுத்த தாம் விஜயம் செய்யவில்லை என உலகச் செயற்பாட்டுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிநிதிகள் குழுத் தலைவர் டாக்டர் ரோத் விஜெடன்பொஷ்ச் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்கள் குற்றவாளிகளின் கைகளில் கிடைப்பதனால் நாட்டின் சட்ட ஒழுங்கு கட்டமைப்பு சீர்குலையக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்

## பொதுநலவாய...

நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

மாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்த உலகத் தலைவர்களை அவுஸ்ரேலிய ஆதி வாசிகள் வரவேற்றனர்.

மாநாட்டின் ஆரம்ப உரையும் ஆதி வாசிகளால் நிகழ்த்தப்பட்டதோடு அவர்கள் பங்குபற்றிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## கூட்டமைப்புடன்...

நேற்று முன்தினம் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் குறித்த தகவல்கள் எதுவும் இது வரை தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, இது வரை நடந்த சந்திப்புக்கள் மிகவும் திருப்தியானதாகவும் பயன்தரக் கூடியதாகவும் அமைந்திருந்ததாகத் தெரிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசப்பட்ட விடயங்கள் குறித்து இன்று அறிக்கை ஒன்று வெளியிடப்படும் எனவும் கூறியுள்ளது.

## ஜனாதிபதிக்கு...

ஆதரவே, தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தி தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பேர்த் நகரில் வாழும் 60 இற்கும் அதிகமான தமிழர்கள் பங்கேற்றதாக ஏ.ஏ.பி. செய்தி வெளியிட்டுள்ளது.


## நாடாளுமன்ற....

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கான பிரேரனையை சமர்ப்பித்து முயற்சிகளை முன்னெடுக்கும்.

இதுவரைகாலமும் ஆளும் கட்சி கொண்டுவரும் திட்டங்களை எதிர்க்கட்சிகள் எதிர்த்து அத்திட்டங்களை குழப்பிவிடும்.

ஆனால் எமது அரசாங்கத்தின் முயற்சியில், தெரிவுக் குழுவில் எதிர்க்கட்சிகளும் அங்கம் வகிப்பதால் அவ்வாறு இடம் பெறாது என நம்புகிறோம் என்றார்.

# போர்க்குற்றத்தை கோத்தாபய மீது சுமத்த முயன்ற சரத் பொன்சேகா




## என்கிறது விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

பொன்சேகா மற்றும் ராஜபக்ஷ ஆகிய இருவரும் தமது சொந்த நலன்களுக்காக தமக்குள் போட்டி போட்டுக் கொள்கின்ற நிலையில் பொன்சேகா விவகாரமானது சிக்கல் நிறைந்த, கடினமான விடயமாக உள்ளது என அமெரிக்கத் தூதுவரினால் வொசிங்டனுக்கு எழுதியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா, பாதுகாப்புப் படைகளின் பிரதம தளபதியாகச் செயற்பட்ட காலப்பகுதியில் இறுதியாக அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் ஏற்பட்ட நிலவரங்கள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கையிட்டிருந்தது. 2009 நவம்பர் 06 இல் எழுதப்பட்ட தகவல்களை பிரதித் தூதுக்குழு அதிகாரி Valerie Fowler இரகசியமானது என அடையாளப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பாக விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செய்திகளை Colombo Telegraph என்னும் ஊடகம் வெளியிட்டுள்ளது.

அதேவேளையில், சரத் பொன்சேகாவை தனது அரசியல் போட்டியாளர் என்கின்ற காரணத்தினால் அவரைத் தோற்கடிக்கவே ராஜபக்ஷ விரும்பியிருந்தார். ஆனால் பொன்சேகாவைக் கைது செய்வதன் மூலமோ அல்லது தன் மீதான போர்க்குற்ற வழக்குகள் தொடர்பாக அழுத்தங்களை மேற்கொண்டுவரும் வெளிநாட்டிற்குக் கடத்துவதன் மூலமோ அவரைத் தோற்கடிக்க வேண்டும் என ராஜபக்ஷ விரும்பியிருக்கவில்லை என அமெரிக்கத் தூதுவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் கொழும்பில் வெளியிட்ப்பட்ட ஊடகங்களில் சரத் பொன்சேகாவின் அமெரிக்கப் பயணமே முக்கியத்துவப் படுத்தப்பட்டிருந்தது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதிக்கட்டப் போரில் மேற்கொள்ளப்பட்ட யுத்தக்குற்றங்கள் தொடர்பாக சரத் பொன்சேகாவிடம் விசாரணை செய்ய முயன்றதுடன் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு எதிரான பொன்சேகாவின் வாக்கு மூலத்தைப் பயன்படுத்த அமெரிக்கா முயன்றதாகவும் இலங்கையின் பெரும்பாலான ஊடகங்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். என அமெரிக்கத் தூதுவர் அவ் வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் நவம்பர் 03 அன்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவை சந்தித்து சரத்பொன்சேகா தொடர்பான விடயத்தை அவருடன் கலந்துரையாடியதாகவும், இது ஜனாதிபதிக்கு எதிராக ஜே.வி.பியால் பயன்படுத்தப்படலாம் எனவும் கோத்தாபய, அமெரிக்கத் தூதரிடம் தெரிவித்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதருடனான சந்திப்பொன்றில் தற்போதைய இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியா, அமெரிக்காவிற்கு பயணம் செய்வது தொடர்பாக தற்போது தான் எந்தவொரு திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்ததாகவும் அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் உள்ளகப் பாதுகாப்புத் திணைக்கள அதி காரிகளுடன் ஜெனரல் சரத் பொன்சேகா நேர்காணலை மேற்கொண்டது தொடர்பாக அவர் இலங்கைக்குத் திரும்பிய பின்னரே தனது அரசியல் உயர்மட்டத்திற்கு இது தொடர்பாக தெரிவித்திருந்தார். இதன் பின்னர் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் விசாரணை செய்ய விருப்பம் கொண்டுள்ளது என்கின்ற இந்தச் செய்தியை சரத் பொன்சேகாவோ அல்லது அவருக்கு நெருக்கமான வேறு யாரோ ஊடகங்களிற்குக் கசிய விடத் தீர்மானித்திருந்தனர்.

கடமைமிக்க இராணுவ வீரன் ஒருவன் தனது தளபதிக்கு தகவலை வழங்கியது போன்று காண்பிப்பதற்காக, சரத் பொன் சேகா யுத்தக் குற்றங்கள் தொடர்பாகப் பதிலளிக்கும் பொறுப்பிலிருந்து தான் நீங்கிக் கொண்டு அதற்கு கோத்தாபயவே பொறுப்பு எனச் சாட்டுதல் செய்வதை நோக்காகக் கொண்டு இவ்வாறு செய்திருக்கலாம்.

இருந்தும் பொன்சேகாவை விரைவில் நாடு திரும்ப வைக்க வேண்டும் என்பதையே அவர்கள் விரும்பினார்கள். அத்துடன் அமெரிக்க அரசாங்கத்திற்குள் இருப்பவர்கள் எவராவது ராஜ பக்ஷவை அவரது பதவியிலிருந்து தூக்கி வீச விரும்பியதால் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கலாம் என இலங்கையில் உள்ள பலர் கருதுகின்றனர் என அமெரிக்கத் தூதுவர் Butenis மேலும் தனது அறிக் கையில் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட முடிவு

பல்கலைக்கழக நிர்வாக மற்றும் கல்வி சாராத ஊழியர்கள் நவம்பர் 2 ஆம் திகதி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தீர்மானித்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி இடம்பெற்ற தொழிற்சங்க கூட்டத்திலேயே இத்தீர்மானம் எட்டப்பட்டது என தெரிவித்தார்.

இது பற்றி பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஆர்.எம். சந்திரபாலா தெரிவிக்கையில் சம்பள முரண்பாடு குறித்த சம்பள மற்றும் பணியாள் ஆணைக்குழு 26 ஆம் திகதி வரை எந்த நடவடிக்கைளும் எடுக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

அரசு அண்மையில் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்து இருந்தது.

பல்கலைக்கழக நிர்வாக மற்றும் கல்விசாராத 10 ஆயிரம் தொழிலாளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போலியான அபிவிருத்தியையே அரசாங்கம் காட்டுகின்றது

## ரில்வின் சில்வா



(கொழும்பு)

அரசாங்கம் போலியான அபிவிருத்தியைக் காட்டுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச செயலாளர் ரில்வின் சில்வா மாத்தறையில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்து வந்த பாதையும் பயணிக்க வேண்டிய பாதையும் என்ற தொனிப்பொருளில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

அபிவிருத்தி என்று கூறப்படுகின்ற போதிலும் அது அபிவிருத்தி அல்ல எனவும், நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டுவருவதாயின் அது வெளிப்படைத் தன்மையுடையதாக அமையவேண்டும் என்றும் இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி எனில் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் வீதிகள் காபற் இடுவதால் மட்டும் நாடு அபிவிருத்தி அடைவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் கடன் சுமை அதிகரித்துச் செல்வதாக குறிப்பிட்ட அவர, இத்தகைய வித்தைகளால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லையென கூறினார்.

மக்களுக்கு ஏதேனும் ஒன்றைக் காட்டி ஏமாற்றுவதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளதாக கூறிய அவர், மக்கள் ஏமாறுவதும் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

# ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தெற்காசியாவின் சிறந்த விருது

சிறந்த அரசதுறை நிறுவனத்துக்கான சார்க் பிராந்திய பியுச்ர்கோ விருதை இலங்கை ஓய்வூதியத திணைக்களம் பெற்றுள்ளது. மலேசியாவில் நடைபெற்ற சார்க பிராந்திய பியுசர்கோ விருது வழங்கும் வைபவத்தின் போதே இலங்கையில் சிறந்த அரசதுறை நிறுவனமாக ஓய்வூதியத்திணைக்களம் தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

ஓய்வூதியத் திணைக்களத்தின் ஈ பென்சன் திட்டம் இந்த விருதுக்காக அங்கீகரிக்கப்பட்டு விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் இவ்விருது வழங்கும் வைபவத்தில் 250 இற்கும் மேற்பட்ட நாடுகளையும் சேரந்த அரச நிறுவன அதிகாரிகள் பங்கு பற்றியிருந்தனர். வருடம தோறும் நடத்தப்படும் இவ்விருது வழங்கலுக்காக இம்முறை 16 நாடுகளைச் சேர்ந்த 498 அரச நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன.

# கடாபியின் கொலைக்கு எதிராக அக்கரைப்பற்றில் ஆர்ப்பாட்டம்



லிபிய முன்னாள் தலைவர் கேணல் மும்மர் கடாபி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அக்கரைப்பற்றில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்று நடைபெற்றது.

லிபிய தலைவர் கேணல் மும்மர் கடாபியின் படுகொலை யை கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு மக்கள் ஜனநாயக முன்னனி செயலாளர் எம்.வை. ஏ.அஸிஸ் அழைப்பு விடுத்ததை அடுத்து அக்கரைப்பற்று நகரபள்ளிவாசல், முன்னால் ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு கடாபியின் படுகொலையை இலங்கை முஸ்லிம்கள் வனமையாக கண்டிப்பதாகவும், அமெரிக்காவின் இரத்தவெறியை நிறுத்துக, சர்வாதிகார போக்கிற்கு எதிராக விழித்தொழுவோம், போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர்.

# பாடசாலை மாணவர்களுக்கு சீன நட்புறவுச் சங்க நிதியுதவி

(கொழும்பு)

இலங்கை - சீன நட்புறவுச் சங்கத்தினால் வவுனியா, மதவைக்குளம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான சீனத் தூதுவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் குறித்த பிரதேசத்தின் மூன்று பாடசாலைகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு சிரமங்ளுக்கு மத்தியில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மாணவர்களுக்கு இதன்போது பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சீன அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

வன்னிப் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் சுமெத பெரேரா, வவுனியா மாவட்ட செயலாளர் பீ.எஸ்.எம்.சாரள்ஸ் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


### விறகினுள் துப்பாக்கி ரவை

(புதுக்குடியிருப்பு)

விறகுக்கட்டையில் நுழைநதிருந்த துப்பாக்கிச் சன்னம் ஒன்று வெடித்து குடும்பப் பெண ஒருவர் மயிரிழையில் உயிர தப்பியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று புதுக்குடியிருப்பு கோம்பாவில் 2ஆம் வட்டாரத்தில் நிகழ்ந்துள்ளது. மேற்படி சம்பவத்தில் ராணி என்று அழைக்கப்படும் திருமதி பிரதாபன் புவனேஸ்வரி என்பவரே புட்டுக்கு மா குழைததுக்கொண்டிருந்தபோது அடுப்பினுள் எரிந்த வண்ணம் இருந்த விறகுக் கட்டையில் துளையிட்டு இருந்த துப்பாக்கிரவை வெடித்துள்ளது. (அ.ப)

# யாழ்.மாணவர் மீதான தாக்குதல் கண்டித்து றுகுணுவில் ஆர்ப்பாட்டம்




யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதலை கண்டித்து றுகுணு பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்று றுகுணு பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்றது. இதற்கான ஏற்பாடுகளை றுகுணு பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்டிருந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். மாணவர்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசு பதில் கூறவேண்டும் போன்ற கோசங்களை எழுப்பினர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவன் இ.கவிராஜன் ஆகியோர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தேசிய அடையாள அட்டை விண்ணப்பிக்கக் கோரிக்கை

எதிர்வரும் டிசெம்பர் மாதம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னராக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கு ஆகக்குறைந்த வயது எல்லை 16 என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலை ஊடாக விண்ணப்பம் செய்பவர்கள் விரைவாகச் செயற்பட்டு தேவையில் லாத காலதாமதத்தைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# 2013 பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்த கடும் எதிர்ப்பு

(பேர்த்)

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் பொதுநலவாய அரசியல் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு நேற்று ஆரம்பமாகிய நிலையில், சர்வதேச மன்னிப்புச் சபை இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய முறையில் இதுவரை பொறுப்புக் கூறவில்லை.

இந்நிலையில், 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய அரசியல் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனுமதிப்பது பொதுநலவாய அமைப்பின் பெறுமானங்களை கேள்விக் குறி ஆக்குவதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

பொதுநலவாய அமைப்பின் பதினொரு உறுப்பு நாடுகளால் பரிந்துரைக்கப்பட்ட ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு மற்றும் மனிதவுரிமைகளுக்கான ஆணையாளர் பதவியை உருவாக்குவது குறித்த ஆலோசனை தொடர்பில் விவாதிக்கப்படுவதற்கு முன்னதாகவே அரசாங்கம் எதிர்ப்புத்தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய அரசியல் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு அனுமதிப்பது பொருத்த மற்றது எனச் சர்வதேச மன்னப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சர்வதேச மன்னிப்புச் சபைக்கு இலங்கையை விமர்சிக்க உரிமை எதுவும் கிடையாது என ஜனாதிபதியின் பேச்சாளரான பந்துல ஜயசேகர கூறியதுடன், மன்னிப்புச் சபையின் கூற்று புக்கச்சார்பானது என்றும் குற்றஞ்சாட்டினார்.

அடுத்த மாநாடு இலங்கையில் தான் நடைபெறுமென்று நேற்று அறிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும்கூறினார்.

# 94 ஆயிரம் குடும்பங்களுக்கு வருட இறுதியில் மின்சாரம்

(கொழும்பு)

இதுவரை மின்சாரம் இல்லாத 94 ஆயிரம் குடும்பங்களுக்கு இவ்வருட இறுதிக்குள் 'விடுலமு லங்கா' திட்டத்தின் ஊடாக மின்சாரம் வழங்கப்படும் என சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசபை, லங்கா மின்சாரக் கம்பனி சக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு இணைந்து 2011 ஜனவரி முதல் ஓகஸ்ட் வரை 156 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை இலங்கையில் 91 வீத குடும்பங்கள் மின்சாரத்தைப் பெற்றுள்ளன. 2012 இறுதிக்கு முன்னர் நாடு முழுவதும் மின்சாரம் வழங்குவதை இலக்காக் கொண்டு அமைச்சு செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.